www.padippakam.com

# தமிழ் தேசிய

# இனப் போராட்டம்

# எங்கே போகிறது

சுப்பு

படிப்பகம்

www.padippakam.com

மனிதர்களிடையே தோன்றுகின்ற மன்முறிவுகள் ஒன்றாக சேர்வதனால் குறிப்பாக போர்க்காலங்களில் காணப்பெறுகின்ற சமூகப் புரட்சி, கலவரங்கள், அட்டூழியங்கள் நடைபெறுவதாக கூறப்பெறுகின்றன. இப்பொதுக் கொள்கையினை ஏற்றுக்கொள்கின்ற அளவில் ஐக்கிய நாடுகளின் கல்வி, சமூக, கலாச்சார (UNESCO) அமைப்பு போர் மக்களின் மனதில் உருவாகின்றது என்ற கூற்றினை கோட்பாடாகக் கொண்டுள்ளது.

-பொது உளவியல் பாடநூல்-

படிப்பகம்

www.padippakam.com

# தமிழ் தேசிய இனப் போராட்டம்

## எங்கே போகிறது

சுப்பு

Brite Str. 35 , 6920- SINS HEIM - HITS BACH
GERMANY

படிப்பகம்

www.padippakam.com

நமது சிந்தனையில் பல்வேறு தவறுகள் ஏற்படலாம். என்றாலும் நாம் இங்கு சிந்தனைகளைமட்டும் கவனிக்கிறோம். அவை சிந்தனையில் தவறுகளாக மட்டும் செயல்படாது நமது சமூக உறவுகளில் மிக அதிகமான அளவில் தவறாகப் பொருள் கொள்வதற்கும் சச்சரவுகளுக்கும் காரணமாகின.

—பொது உளவியல் பாடநூல்

படிப்பகம்

www.padippakam.com

# உரை

தமிழ் தேசிய இனப் போராட்ட வரலாறு பற்றிய குறிப்புகள் சிங்கள எழுத்தாளர்களால் எழுதப்பட்ட பல ஆங்கில நூல்களில் காணப்படுகின்றன. ஆனால் அவை பல பிழையான செய்திகளைக் கொண்டிருக்கின்றன.

தமிழில் அப்போராட்டம் பற்றி பல சிறு, சிறு நூல்கள் வெளிவந்த போதிலும் முழுமையான வரலாற்றைக் கொண்ட நூல் எதுவும் வெளிவரவில்லை. நமது இனத்தின் வாழ்வையும், தாழ்வையும் எதிர்காலச் சந்ததியினர் அறிய வரலாற்று ஆசிரியர்களால் பல நூல்கள் தமிழில் எழுதப்படவேண்டும்.

இந்தக் கைநூல் பல இயக்கங்களின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் தந்த தகவல்கள் அடிப்படையில் எழுதப்பட்டதாகும். இது முழுமையான தகவல்களைக் கொண்டிருக்கவில்லை. வரும் காலத்தில் மேலும் பலரிடமிருந்து தகவல்களைத் திரட்டி ஒரு வரலாற்று நூலாக்க முயல்கிறோம்.

நீங்கள் ஒவ்வொருவரும் உங்களுக்குத் தெரிந்த குறிப்புகளை எழுதி வெளியிடுங்கள். அது நமது வருங்காலச் சந்ததியினருக்குச் செய்யும் பேருதவியாகும்.

சுப்பு
ஜனவரி 1991

படிப்பகம்

www.padippakam.com

# உள்ளே . . . .


- தமிழ் தேசிய இனத்தின் எழுச்சி
- இலங்கையில் இந்தியத் தலையீடு
- இயக்கங்களிடையே ஒற்றுமை முயற்சி
- ரெலோ தலைவர் ஸ்ரீ கொலை
- புளொட் இயக்கத்தில் பிளவு
- E.N.D.L.F- E.P.D.P அமைப்புகளின் தோற்றம்
- ரெலோ இயக்கத்தில் பிளவு
- சோதியாவின் மர்ம மரணம்
- யாழ் குடாநாட்டில் அரசின் இராணுவ நடவடிக்கை
- மாகாணசபைத் தேர்தல்
- புலிகளின் நிலைப்பாடும் தேர்தல் மோசடிகளும்
- பாராளுமன்றத் தேர்தல்
- புலிகள்–அரசு பேச்சுவார்த்தை
- மாகாணசபை கலைப்பு
- தனிமனித விருப்பு வெறுப்புக்கள்


படிப்பகம்

www.padippakam.com



# தமிழ் தேசிய இனத்தின் எழுச்சி

1977 ல் ஆட்சி பீடம் ஏறிய ஜே.ஆர். அரசு தமிழ் மக்களுக்கெதிராக கட்டவிழ்த்துவிட்ட பேரினவாதத்திலிருந்து தம்மைக் காத்துக் கொள்ள வேண்டிய நிலைக்கு தமிழ் பேசும் மக்கள் தள்ளப்பட்டனர். தமிழ் தேசிய இனத்தின் ஆரம்ப கால ஆயுதப் போராட்டம் நிதானமான வளர்ச்சிப் போக்கைக் கொண்டிருந்தது. இதனால் இப்போராட்டத்திற்கு வெளிநாடுகளில் ஆதரவு வளரத்தொடங்கியது. இந்தப் போராட்டத்திற்கு வெளிநாடுகளில் ஆதரவு வளர்வது கண்ட ஏகாதிபத்தியம் தமது அடிவருடிகளைக்காக்க இலங்கையில் ஆயுதங்களைக்குவித்தது. சியோனிஸ்டுகளும், கூலிப்படைகளும் இலங்கையில் குவிக்கப்பட்டனர். இதன் மூலம் தமிழ் தேசிய இனம் நசுக்கப்பட்டது. இதற்கு எதிராகப் போராட இளைஞர்கள் பல குழுக்களாக புறப்பட்டனர். இளைஞர்களின் போராட்டத்திற்கு உலக ஆதரவை திரட்டுவதில் வெளிநாட்டுத் தமிழர்கள் முனைப்பாக செயல்பட்டனர் ஆனால் உலக நாடுகள் வாயளவில் இலங்கை அரசைக் கண்டித்ததேயன்றி தமிழர்களைக் காக்க எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

## இலங்கையில் இந்தியத் தலையீடு

1949 ம் ஆண்டு இந்திய வம்சாவழியினரான மலையக மக்களின் வாக்குரிமை, குடியுரிமை இலங்கை அரசால் பறிக்கப்பட்ட போது இந்தியா தலையிடவில்லை. 1956, 58, 61, 64, 74, 76, 77, ஆகிய ஆண்டுகளில் இலங்கையில் நடைபெற்ற வன்செயல்களால் தமிழ் மக்கள் பெருமளவு பாதிப்புக்குள்ளான போது (உயிரிழப்பு, உடமைகள் அழிக்கப்பட்டு அகதிகளாக்கப்பட்ட போது) இந்தியா கவலைப்படவில்லை.

1977 க்குப் பின் இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கை மாற்றமும் இந்திராகாந்தி பதவியில் இல்லாதபோது ஜே.ஆர். அரசு காட்டிய இந்திராகாந்திக் கெதிரான செயற்பாடுகளும் (மொராஜி தேசாய் இந்தியப் பிரதமராக இருந்த போது) மீண்டும் ஆட்சிக்கு வந்த இந்திரா காந்தியின் இலங்கை பற்றிய கண்ணோட்டத்தை மாற்றமடையச் செய்தது. இலங்கையின் மேற்கத்திய நாடுகள் சார்பான வெளிவிவகாரக் கொள்கை இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக இருந்தது.

சிறிமா–சாஸ்திரி, சிறிமா–இந்திரா ஒப்பந்தம், கச்சதீவு ஒப்பந்தம் அனைத்திலும் இலங்கை அரசுக்கு சார்பாக நடந்து கொண்ட இந்திய அரசு 1983 ல்

படிப்பகம்

www.padippakam.com


தங்கத்துரை ,குட்டிமணி ஜெகன் மீது இலங்கை அரசு வழக்கு தொடர்ந்தபோது இலங்கைத் தமிழ் இளைஞர்கள் 15 பேரை சென்னையில் இருந்து பெங்களூருக்கூடாக இந்தியாவின் வடபகுதிக்கு அழைத்துச் சென்று பயிற்சி அளித்தது.

இவர்கள் பயிற்சி முடிந்ததும் இலங்கை வெலிக்கடைச் சிறையில் உள்ள தமிழ் பேராளிகளை குறிப்பாக தங்கத்துரை, குட்டிமணி ஆகியோரை சிறை மீட்கும் பணிக்கு அமர்த்தப்பட்டனர். அவர்கள் சிறை மீட்பதற்கு முன்னார் இனக்கலவரம் தொடங்கியதை அடுத்து தங்கத்துரை, குட்டிமணி உட்பட 53 போராளிகள் படுகொலை செய்யப்பட்டனர்.

இலங்கையில் நடந்த 83 ஜுலை இனப்படுகொலைக்குப் பின் இலங்கை அகதிகள் தமிழ் நாட்டுக்குச் செல்ல இந்தியா ஊக்குவித்தது. தமிழ் போராளிகளும் தமிழ் நாட்டில் தளம் அமைக்க அனுமதிக்கப்பட்டனர். இந்த நேரத்தில் தென்கிழக்கு ஆசியாவில் மிகப் பலம் வாய்ந்த உளவு தாபனமான ஆய்வுப் பகிர்வு பகுதி றோ (RAW) தமிழ் போராளி இயக்கங்களை கையாள விடப்பட்டது. இந்த அமைப்பே கிழக்கு வங்காளப் பிரச்சனையில் தலையிட்டு பாகிஸ்தானில் இருந்து கிழக்கு வங்காளத்தைப் பிரித்து பங்களாதேஷை உருவாக்கியது.

தமிழ் நாட்டில் நக்சல்பாரிகள் என அழைக்கப்படும் மாக்சிச தீவிரவாதிகளை ஒடுக்குவதற்கென அமைக்கப்பட்ட காவல்துறையின் கியூ (Q) பிரிவு மோகனதாஸ் டி.ஜி .பி. யின் நேரடிக் கண்காணிப்பில் இராசசேகரநாயர் டி.ஐ.ஜி. யின் பொறுப்பில் இயங்கியது. இந்தப் பிரிவு தமிழ்ப் போராளிகளைக் கண்காணிக்கப் பயன்படுத்தப்பட்டது. இப்பிரிவுக்கு பொறுப்பாக இருந்த இருவருமே இந்திய நலன்களை விட அமெரிக்க உளவு தாபனமான சி.ஐ.ஏ. யின் தேவைகளைப் பூர்த்தி செயவதில் கவனமெடுத்தனர். இவர்களுக்கு உதவியாக "றோ"(RAW) வின் தமிழ் நாடு மாநிலப் பொறுப்பதிகாரியான உன்னிக்கிருஷ்னன் டி.ஐ.ஜி. முழு ஒத்துழைப்பை வழங்கியதுடன் தமிழ் இயக்கங்களிடையே கூட்டுக்களை உருவாக்குவதிலும், உடைப்பதிலும் இவர் செயற்பட்டு வந்தார். இவர் பின்னர் அமெரிக்க உளவாளி என கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

1983 ம் ஆண்டில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் மாணவரமைப்பினூடாக "கெஸ்" (தற்போதைய ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பு) அமைப்பும், இராணுவ நடவடிக்கைகள் மூலம் விடுதலைப் புலிகளும், இராணுவ நடவடிக்கைகள், மக்கள் அமைப்பு ஆகியவற்றின் மூலம் புளொட்டும் (P.L.O.T.E.) மக்களிடையே அதிக செல்வாக்குப் பெற்றிருந்தன. ஈரோஸ் "தர்க்கீகம்" என்ற பத்திரிகை மூலம் அறிமுகமாகி இருந்தன. ரெலோ இயக்கம் குட்டிமணி, தங்கத்துரை ஆகியோரின் நீதிமன்ற விசாரணைகள் மூலம் மக்களிடையே

படிப்பகம்

www.padippakam.com



அறிமுகமாகியிருந்தன.

விடுதலை இயக்கங்கள் தமிழ் நாட்டில் காரியாலயங்கள் அமைத்தது செயற்படத் தொடங்கிய போது. 1983 ம் ஆண்டு வரை இயக்கங்களில் இருந்த நிதானமான வளர்ச்சிப் போக்கில் திடீர் வீக்கம் ஏறபட்டது. இதனால் பல போராளி அமைப்புக்கள் புதிதாகத் தோன்றின. ஆனால் இவ்வமைப்புகளில் புலிகள், புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஈரோஸ், ஆகிய ஐந்து இயக்கங்களையும் தமிழர் விடுதலைக் கூட்டணியையுமே முக்கிய அமைப்புகளாக இந்தியா கருதியது.

மோகனதாஸ் டி.ஜி.பி. (கியூ) உன்னிகிருஸ்னன் டி.ஐ.ஜி. ( றோ) ஆகியோரின் கையாளாக தந்தை செல்வாவின் மைந்தன் சந்திரகாசன் இந்தியாவில் செயல்பட்டார் . ஆரம்பகாலத்தில் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஈரோஸ் ஆகிய இயக்கங்கள் சந்திரகாசனில் தங்கி தம்மை வளர்க்க வேண்டியிருந்தன.

1983 ம் ஆண்டுக்குப் பின்னரும் விடுதலை இயக்கங்களை ஒன்றிணைக்கும் முயற்சியில் பலர் ஈடுபட்டனர். இயக்கங்கள் இணையாமல் தடுப்பதில் “றோ” மிக அவதானமாகச் செயல்பட்டது. இதற்கு சந்திரகாசனை “றோ” வினர் பயன்படுத்திவந்தனர்.

1984 ம் ஆண்டிலேயே இந்தியா ஈழம் சம்பந்தமான தனது நிலைப்பாட்டினை அனைத்து இயக்கங்களுக்கும் மிகத் தெளிவாக உணர்த்திவிட்டது. அப்போது இந்திராகாந்தியின் வெளியுறவு ஆலோசகராக இருந்த ஜி. பார்த்தசாரதி அவர்கள் தமிழீழம் பிரிவதை இந்தியா ஆதரிக்காது என பலமுறை இயக்கங்களுக்கு உணர்த்தியுள்ளார்.

இந்தியாவின் நோக்கம் இலங்கை அரசு தன்னுடைய ஆதரவை நாடும் விதத்தில் இலங்கை அரசுக்கு நிர்ப்பந்தத்தை உருவாக்குவதே. அதன் விளைவே புலிகள் சிங்களக் கிராமங்கள் மீது தாக்குதல் தொடுக்கக் காரணமாகும். சிங்களப் பொதுமக்கள் பல நூற்றுக் கணக்கானோர் கென் பாம், டொலர் பாம், அனுராதபுரம் ,கொக்கிளாய், நாயாறு ஆகிய இடங்களில் கொலை செய்யப்பட்டனர். இச் சம்பவங்களின் போது கென், டொலர் பாமில் பலியானவர்கள், முன்னர் தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம், காந்தியம் போன்ற அமைப்புளால் குடியேற்றப்பட்ட மலையக மக்களை பலாத்காரமாக வெளியேற்றிவிட்டு அரசு உதவியுடன் அங்கு குடியேற்றப்பட்ட சிங்களக் குற்றவாளிகளாகும். இவர்கள் பல்வேறு குற்றச்சாட்டுகளினால் தண்டனை பெற்ற சிறைக் கைதிகளாவர். இவர்கள் இங்கு திறந்த வெளிக் கைதிகளாக, பலிக் கடாவாக அரசினால் குடியேற்றப்பட்டவர்கள். ஆனால் இவர்கள் யார் என புலிகள் அடையாளம் காட்டாது இவர்கள் மேல் தாக்குதல் செய்ததால் இக் கொலைகள் அரசுக்கு சாதகமாக அமைந்தது. புலிகளின்

படிப்பகம்

மேற்படி தாக்குதலின் போது அனுராதபுரத்தில் சிங்கள அப்பாவி மக்கள் மேல் நடத்திய தாக்குதலை புலிகளின் நண்பர்களாக அப்போதிருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈரோஸ் இயக்கங்கள்கூட கண்டிக்காது மௌனம் சாதித்தன.

இக் கொலைகளை அடுத்து ஊர்காவலுக்கென சிங்கள மக்களைக் கொண்ட ஊர்க்காவல் படை அமைத்து அரசு அவர்களுக்கு ஆயுதம் வழங்கியது. அது மாத்திரமல்ல அந்தக்கிராமத்தைப் பாதுகாக்கவென இராணுவ முகாம் ஒன்றும் அமைக்கப்பட்டது.

இந்தியாவில் இயக்கங்களை "றோ" கையாளத்தொடங்கியதும் அவர்கள் ஒவ்வொரு இயக்கங்களையும் இனம்காண முற்பட்டனர். இந்திய அரசுடன் ஆரம்பகாலத்திலேயே நேரடியாக குறிப்பாக இந்திராகாந்தி, ஜிபார்த்தசாரதி ஆகியோருடன் புளொட் இயக்கம் தொடர்புகளை ஏற்படுத்தி இருந்ததால் முதலில் இவர்களைப்பற்றி ஆராய்ந்த "றோ" புளொட் இந்தியாவுக்கு நிபந்தனையற்ற ஆதவு வழங்கமாட்டாது என்பதை உணர்ந்து கொண்டது.

இந்தியாவின் நேரடித் தலைமீட்டை புளொட் ஆரம்பகாலத்திலிருந்தே ஏற்காததோடு பங்களாதேஷில் இந்தியாவின் நேரடித் தலைமீட்டினால் ஏற்பட்டுள்ள நிலையை "வங்கம் தந்தபாடம்" என்ற பெயரில் புத்தகமாக வெளியிட்டிருந்தனர். அத்துடன் புளொட் உறுப்பினர்கள் சிரியாவில் இராணுவப் பயிற்சியினை மேற்கொண்டிருந்தனர். இவையாவும் "றோ" வுக்கு இவர்கள் மேல் நம்பிக்கையின்மையை ஏற்படுத்தியது. ஆனால் இவர்கள் தமக்கு எதிராக செயல்படாதிருக்க இவர்களுக்கும் சில உதவிகளை செய்து வந்தனர்.

புளொட் தமது கொள்கை விளக்க வெளியீட்டில் "தமிழீழ மக்கள் விடுதலையை நாம் தனியாகப் போராடி வென்றெடுக்க முடியாது, சிறிலங்காவில் உள்ள முரண்பாடுகளும் இப்போராட்டத்தை தீர்மானிக்கும்" எனக் கூறியிருந்தனர்.

ஏனைய இயக்கங்களான புலிகள், ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ, ஆகியன இந்தியாவிடம் நிபந்தனையுடனான ஆதரவைப் பெறத் தயாராக இருந்தனர். எந்தவகையிலாவது தமது இலட்சியத்தை அடைந்தேயாகவேண்டும், முடிவே முக்கியம் . வழிகளல்ல. வழிகளை முடிவு நியாயப்படுத்திவிடும் என்ற நம்பிக்கையில் இவர்கள் செயல்பாடு அமைந்திருந்ததால் இந்தியா இவர்களை வளர்க்க முற்பட்டது.

இந்தியாவிடம் நிபந்தனையற்ற, தமது போராட்ட வழிமுறைக்கேற்ற உதவிகளைப் பெறமுடியாது என உணர்ந்த புளொட் இயக்கம் வெளிநாடுகளில் இருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்யத்தொடங்கி அவற்றை சென்னைத்

www.padippakam.com



துறைமுகத்தினூடாக இறக்க முற்பட்டனர். இதை உணர்ந்து கொண்ட "றோ" தமிழ் நாடு காவல்துறை "கியூ" பிரிவு டி.ஜி.பி. மோகனதாஸின் உதவியுடன் புளொட் இறக்குமதி செய்த 4 கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களை சென்னைத்துறைமுகத்தில் வைத்து பறிமுதல் செய்தனர். இரண்டாவது முறையாகவும் இவர்கள் ஆயுதம் இறக்கமுற்பட்டபோது அந்த முயற்சியும் றோவின் தலைமீட்டால் தடைப்பட்டது. தமிழீழப் போராட்டத்திற்கு தன்கையே தனக்குதவி என வெளிநாட்டில் இருந்து முதல் முதலாக ஆயுதம் இறக்கியவர்கள் புளொட் இயக்கத்தினரே. இவர்களைத் தவிர ஏனைய இயக்கத்தினருக்கு ஆயுதம் வெளிநாட்டிலிருந்து இறககவேண்டிய தேவை அப்போது இருக்கவில்லை. இவர்களுடைய போராட்ட வழிமுறைகளுக்கு ஆரம்பத்தில் அதிகளவிலான ஆயுதம் தேவைப்படாததுடன் அப்போது போராடத் தேவையான ஆயுதங்களை இந்தியா அவர்களுக்கு வழங்கியமையுமே காரணமாகும்.

# இயக்கங்களிடையே ஒற்றுமை முயற்சி

*1982 ம் ஆண்டுமுதல் இயக்கங்கள் ஒரு பொதுவேலைத் திட்டத்தின் கீழ் ஒன்றிணைந்து செயல்பட வேண்டுமென பல முறை பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வந்தன. இப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளாது புலிகள் ஒதுங்கி இருந்தனர். இந்தப் பேச்சுவார்த்தைகள் ஏதோகாரணங்களால் ஒவ்வொரு முறையும் தோல்வியில் முடிந்தன. இந்த முயற்சிகள் தொடர்பான அறிக்கை ஒன்று "லங்காராணி" அருளரால் 1983 ல் வெளியிடப்பட்டது. **ஐக்கியத்திற்கான போராட்டத்தில்"** என்ற தலைப்பில் இந்த அறிக்கை வெளிவந்தன.*

*ஆனால் தொடர்ந்தும் ஐக்கியத்துக்கான போராட்டம் நடந்துகொண்டிருந்தன.*

*1984 பெப்ரவரி 19 ல் புளொட்– ரெலா ஒரு குறைந்தபட்ச வேலைத்திட்டத்தில் இணைந்தனர்.*

*1984 மார்ச் மாதம் 18 ம் திகதி ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட் ஆகிய இயக்கங்கள் கலந்து கொண்ட ஒரு கூட்டத்தில் இவர்கள் ஒரு பொது உடன்பாட்டுக்கு வந்ததோடு தொடர்ந்தும் பேச்சுக்கள் நடந்து வந்தன. ஆனால் இக்கால கட்டத்தில் பிற்போக்குவாதிகளின் ஆளுமை இயக்கங்களின் நடவடிக்கைகளில் பங்கெடுத்ததால் இம் முயற்சியும் பின்னர் தொடரமுடியாது போயின.*

*1984 ம் ஆகஸ்ட் மாதம் 15 ம் திகதி சென்னையில் உள்ள **"தமிழ் தகவல் நிலையம்"** ஒற்றுமை முயற்சியில் சகல இயக்கங்களையும் அழைத்திருந்தது.*

இந்த அழைப்பை என்.எல்.எவ்.ரி. , ஈ.பி.ஆர்.எல்.எவ்., புளொட், ரெலோ ஆகியன ஏற்று அக்கூட்டத்தில் கலந்துகொண்டன.

புலிகள் ஒற்றுமை முயற்சிகள் எதிலும் ஈடுபடாமல் இருப்பதுகுறித்து புளொட் இயக்கம் சுட்டிக் காட்டி அவர்களை ஒரு பொது உடன்பாட்டின்கீழ் கொண்டு வரவேண்டிய தேவையை வலியுறுத்தி புலிகளுக்கு கடிதங்கள் எழுதியது. இதன் அடிப்படையில் ஒற்றுமை முயற்சி சம்பந்தமாக புலிகள் சார்பில் டாக்டர் ஜெயகுலராசா, செந்தில், ரஞ்சித், ஆகியோர் புளொட் இயக்கத்தினருடன் பேச்சு நடத்தினர். இந்தப் பேச்சு சிலகாலம் தடைப்பட்டு பின்னர் விரிவுரையாளர் நித்தியானந்தன் தலைமையில் புலிகள் இயக்கத்தினரும் உமாமேகஸ்வரன் தலைமையில் புளொட் இயக்கத்தினரும் சந்தித்து பேசினர். ஆனால் இந்தப் பேச்சுக்களும் வெற்றியளிக்கவில்லை.

இந்தக் காலகட்டத்தில் சந்திரகாசன் தன்னுடைய ஆதரவில் இயங்கி வந்த இயக்கங்களான ஈரோஸ், ஈ. பி.ஆர்.எல்,எவ், ரெலோ, ஆகிய இயக்கங்களை ஈழதேசிய விடுதலை முன்னணி (E.N.L.F)என்ற ஒரு அமைப்பில் இணைத்தார். ஆனால் இந்த அமைப்புக்கள் சந்திரகாசனின் சுயரூபத்தை உணர்ந்து கொண்டு அவரிடமிருந்து மெல்ல மெல்ல விடுபட முயன்றுகொண்டிருப்பதாக தோற்றமளித்தனர்.

இந்த நேரத்தில் (24. 9. 84) புளொட் இயக்கம் ஈ. என். எல். எவ். கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட ஆரம்பித்தது. இந்தப் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்றன. இதன் பலனாக 11. 01. 85, 18. 05. 85, ஆகிய தினங்களில் நடந்த சந்திப்புக் கூட்டங்களின் பின் ஈழவிடுதலை இயக்கங்களின் கூட்டமைப்பும் புளொட்டும் தமக்குள்ளே ஒரு பரஸ்பர புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொண்டதாக அறிவித்தன.

இதே வேளை தமிழர் விடுதலைக் கூட்டணியாலும் ஒற்றுமை முயற்சிக்கான அழைப்பு இயக்கங்களுக்கு விடப்பட்டிருந்தன. இந்த அழைப்பு மூன்று இயக்கங்களைக் கொண்ட ஈழதேசிய விடுதலை முன்னணியாலும் புளொட்டாலும் பரிசீலிக்கப்பட்டு தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் தேசிய விடுதலையில் பங்குண்டு என ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதனடிப்படையில் 1985 ஜனவரி மாதம் சென்னை தமிழர் நல மருத்துவ மனையில் ( MUST) நடைபெற்ற ஒன்றிணைபபுக் கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட், ஈ. என். எல். எவ். (ஈரோஸ், ரெலோ, ஈ. பி. ஆர். எல். எவ். ) ஆகியன கலந்துகொண்டன. இக்கூட்டத்திற்கு புலிகளுக்கு அழைப்பு விடுத்தும் அவர்கள் கலந்துகொள்ளவில்லை. மீண்டும் இந்த ஐந்து அமைப்புகளும் 28. 02. 85 அன்று ஈழதேசிய விடுதலை முன்னணியின் (ENLF) காரியாலயக் கட்டிடத்தில் பேச்சுவார்த்தை நடத்தினர். இக்கூட்டத்தில் மலையக மக்கள் பிரச்சனை, இஸ்லாமிய மக்கள் பிரச்சனை பற்றி ஆராயப்பட்டதுடன் தமிழீழ

www.padippakam.com


எல்லைகள், போராட்ட முறைகள் பற்றியும் பொது உடன்பாடு காணப்பட்டது. இதையடுத்து இந்த ஐந்து அமைப்புகளும் சேர்ந்த கூட்டமைப்புக்கு தற்காலிகமாக **"விடுதலை இயக்கங்களின் கூட்டமைப்பு"** எனப் பெயரிடப்பட்டது. இந்தக் கூட்டமைப்புக்கு பொதுவான கொடி, பொதுவான யாப்பு, தேசிய கீதம் ஆகியவை உருவாக்கவேண்டும் எனவும் அது பற்றி ஆய்வு செய்ய 8.03.85 அன்று மீண்டும் கூடி ஒவ்வொரு அமைப்பில் இருந்தும் இரண்டுபேர் கொண்ட குழு அமைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டு அக்கூட்டமைப்புக்கு செயலாளராக ரெலோ இயக்கத்தைச் சேர்ந்த முகிலன் தெரிவு செய்யப்பட்டார். இக்கூட்டத்தில் புலிகளுக்கு பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள மீண்டும் நினைவூட்டல் கடிதம் அனுப்புவதென தீர்மானிக்கப்பட்டு கடிதமும் அனுப்பப்பட்டது.

இந்த இயக்கங்கள் எல்லாம் இணைய வேண்டும் என வெளிக்கு பறைசாற்றிக் கொண்டபோதிலும் ஒவ்வொரு இயக்கமும் இதய சுத்தியாக இணையவேண்டும் என்ற எண்ணம் கொண்டிருக்கவில்லை என்பதுதான் உண்மை. இதனால்தான் ஒவ்வொரு இயக்கங்களும் தங்களை அழித்துக் கொண்டதுடன் தேசிய இனப் போராட்டத்தையும் தோல்வியுறச் செய்தன.

இவர்களின் இதய சுத்திக்கு இதோ ஒரு உதாரணம்,-

28. 02. 85 ல் நடைபெற்ற கூட்டத்தில் முக்கிய பிரச்சனைகள் ஆராயப்பட்டு தீர்மானம் எடுக்கவேண்டி இருந்ததால் ஒவ்வொரு அமைப்புகளின் தலைவர்களும் அக்கூட்டத்தில் பங்குபற்றவேண்டும் என முந்திய கூட்டத்தில் ஏகோபித்த முடிவெடுக்கப்பட்டது. ஆனால் அன்றைய கூட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ். செயலாளர் நாயகம் பத்மநாபாவோ, ரெலோ இயக்கத் தலைவர் ஸ்ரீசபாரத்தினமோ பங்குபற்றவில்லை. ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் வரதராஜப்பெருமாளும், ரெலோ சார்பில் சுதாகரும் கூட்ட அமைப்பாளர் முகிலனுமே கலந்து கொண்டனர். த. வி. கூட்டணி சார்பில் திருவாளர்கள் அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், சம்பந்தன், ஆகியோரும் புளொட் சார்பில் உமாமேகஸ்வரன் தலைமையில் மூவரும் ஈரோஸ் சார்பில் பாலகுமாரும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டம் நடந்துகொண்டிருந்த வேளை இந்திரா காங்கிரஸ் எம்.பி. திரு. கு. ரங்கராஜன் ஆயுதம் தாங்கும் தமிழ்க் குழுக்களை ஒரே நேரத்தில் சந்திக்க விரும்புவதாகவும் அன்று மாலை 6 மணிக்கு வரும்படியும் திரு அமிர்தலிங்கத்தினூடாக அழைப்பு விடுத்திருந்தார். எனவே இந்த அழைப்பை ஏற்று -அந்தக் கூட்டத்தில் பங்குபற்றிய -நான்கு ஆயுதக்குழுக்களும் எம். பி.யை கட்டாயமாகச் சந்திக்கவேண்டும் என திரு. அமிர்தலிங்கம் வற்புறுத்தினார். ஆனால் பாலகுமார்(ஈரோஸ்) வரதராஜப்பெருமாள் ஈ.பி. ஆர். எல். எவ்.) ஆகியோர் தமது இயக்கங்களுக்கு அன்று மாலை

படிப்பகம்

www.padippakam.com



முக்கியமான வேறுசந்திப்புக்கள் இருப்பதாகவும் அன்று திரு.கு . ரங்கராஜன் அவர்களை சந்திக்க முடியாது என்றும் மறுநாள் போய் எல்லோரும் சந்திக்கலாம் என்று கூறி அன்று சந்திக்க மறுத்துவிட்டனர்.

ஆனால் அன்று எம்.பி. சந்திக்க குறிப்பிட்ட நேரத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ, ஈரோஸ் ஆகிய மூன்று இயக்கங்களும் புளொட் இயக்கத்திற்கு தெரியாமல் திரு. கு. ரங்கராஜன் எம்.பி.யை சந்திக்க சென்றனர். குறிப்பாக பகல் நடந்த கூட்டத்திற்கு சமூகமளிக்காத பத்மநாபா, சிறிசபாரத்தினம் ஆகியோர் பாலகுமாருடன் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர் . இயக்கங்களிடையே ஒற்றுமை உருவாக இவர்களிடையே இதயசுத்தியான நம்பிக்கையின்மையே காரணம் என்பதற்கு இச் சம்பவம் ஒரு எடுத்துக்காட்டாகும்.

போராட்டத்தில் பிரபாகரன் இணைந்துகொண்ட காலத்திலேயே "தமிழீழம் கிடைத்தால் மாதத்திற்கு ஒரு பிரதமர் ஆட்சி செய்யவேண்டிவரும்" என்று கூறுவதாக அவரது நணபர்கள் கூறியுள்ளனர்.

ஆரம்பகாலத்திலிருந்தே பிரபாகரன் தமிழீழத்தில் ஒரேஒரு இயக்கம்தான் இருக்கவேண்டும், அது தனது தலைமையிலேயே இருக்கவேண்டும் என்ற நோக்கத்துடனேயே செயல்பட்டவர். எனவேதான் பிரபாகரன் ஒற்றுமை முயற்சியில் அக்கறை கொள்ளவில்லை.

28. 02. 85 ல் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானித்தபடி 8. 03. 85 ல் நடைபெறவேண்டிய விடுதலை இயக்கங்களின் கூட்டமைப்புக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதாக கூட்ட அமைப்பாளர் (ரெலோ) முகிலனால் அனைவருக்கும் கடிதம் அனுப்பப்பட்டது.

பின்னர் ஈழதேசிய விடுதலை முன்னணியினரால் (ஈ. என். எல்.எவ். ) தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும், புளொட்டுக்கும் தனித் தனியாக கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்தன.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எழுதிய கடிதத்தில் – ஈ. என். எல். எவ். 17. 03. 85 கூட்டத்திற்கு அமைய – ஈ. என். எல்.எவ். புலிகளுடன் ஒற்றுமை முயற்சியில் ஈடுபட்டு வருவதாகவும் அது பூரணமான பின்பு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்துடன் (புளொட்) ஒரு ஐக்கியத்தை ஏற்படுத்திக் கொண்டு பின்னர் பேச்சுவார்த்தையை தொடரலாம் என்றும் இதுவரை நடந்த பேச்சுவார்த்தைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

புளொட் இயக்கத்திற்கு அனுப்பிய கடிதத்தில் புளொட் அமைப்புடன் இணைந்த ரெலாவுக்கும் ஈ. என்.எல்.எவ். கூட்டில் உள்ள ரெலோவுக்கும்

படிப்பகம்

www.padippakam.com



இடையே உள்ள பிரச்சனைகள் தீர்க்கப்படாமல் ஒற்றுமை சாத்தியம் இல்லை எனவும் இது தீர்க்கப்பட்ட பின்னர் பேச்சு தொடரலாம் எனவும் (17. 03. 85. கூட்டத்துக்கமைய ) ஈ. என்.எல். எவ். கடிதத் தலையில் (கருத்துத் தாங்கி) கூட்டச் செயலாளர் முகிலன் ஒப்பம் இட்டு அனுப்பியிருந்தார்.

இந்த இரு கடிதங்களிலும் விடுதலை இயக்கங்களின் கூட்டமைப்பு கூட்டம் தொடராததற்கு வெ்வேறு காரணங்கள் கூறப்பட்டிருந்தன. அத்துடன் ரெலாவுக்கும், ரெலோவுக்கும் உள்ள பிரச்சைனகள் தீர்க்கப்பட்ட பின்னரே இந்த இணைவு முயற்சிகள் ஆரம்பமானது என்பதும் குறிப்பிடத்தக்கது.

விடுதலை இயக்கங்களின் கூட்டமைப்புக் கூட்டம் 28. 02. 85 ல் நடந்து இரண்டு நாட்களுக்குப் பின்னர் ஈ. பி. ஆர். எல். எவ்., ரெலோ, ஈரோஸ் ஆகிய மூன்று இயக்கங்களையும் சந்திரகாசன் அழைத்து பேசினார். இந்த மூன்று அமைப்புகளும் சேர்ந்த ஈழதேசிய விடுதலை முன்னணியுடன் த.வி.கூட்டணி, புளொட் ஆகியன ஒன்றிணைவதை இந்தியா விரும்பவில்லை. அதே சமயம் இந்த இணைவு சந்திரகாசனுக்கும் புலிகளுக்கும் அச்சத்தைக் கொடுத்தது. இந்த அச்சம் விடுதலை இயக்கங்களின் கூட்டமைப்பு உடைக்கப்பட்டு ஈழதேசிய விடுதலை முன்னணியுடன் புலிகள் சேர வழிவகுத்தது.

ஆக்குபவனும் நானே அழிப்பவனும் நானே என்ற கீதை உபதேசத்தை வேதமாக்க கொண்ட "றோ" வின் ஆலோசனையுடன் சந்திரகாசன் முயற்சியால் 10. 04. 85 ல் ஈழதேசிய விடுதலை முன்னணியும், புலிகளும் கீழ்காணும் அரசியல் ரீதியான ஐந்து அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றுபடுவதாக அறிவித்து ஸ்ரீசபாரத்தினம், பத்மநாபா, பிரபாகரன், பாலகுமார் ஆகிய நால்வரும் கைகோத்து நிற்கும் புகைப்படங்கள் பத்திரிகைகளில் எல்லாம் வெளிவந்தன.

## மேற்படி அமைப்புகளின் ஒற்றுமைக்கான ஐந்து அடிப்படைக் கொள்கைகள்.

1. ஸ்ரீலங்கா அரசின் ஆதிக்கத்தில் இருந்தும் அடக்குமுறையில் இருந்தும் எமது தாயகத்தின் சுதந்திரத்தையும் இறைமையையும் வென்றெடுத்தல்.

2. இலங்கைவாழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டுகின்ற தனியரசை தவிர்ந்த வேறெந்த குறைந்த பட்ச சமரசத் திட்டத்தையும் அங்கீகரிப்பதில்லை.

3. பரந்துபட்ட மக்களின் பங்களிப்போடு பரிநாமம் பெறும் வெகுஜன ஆயுதப் போராட்டத்தை (மக்கள் போராட்டத்தை) எமது போராட்டப்

படிப்பகம்

www.padippakam.com



பாதையாகக் கொள்ளல்.

4. தேசிய சுதந்திரப் போராட்டத்தோடு சோசலிசப் புரட்சியையும் முன்னெடுத்து சுதந்திரத் தாய்நாட்டில் சோசலிச சமுதாயத்தைக் கட்டியெழுப்புதல்.

5. உலக ஏகாதிபத்திய , நவகாலனித்துவப் பிடியில் இருந்து எமது தேசத்தை பூரணமாக விடுவித்து அணிசேராக் கொள்கையைக் கடைப்பிடித்தல் ஆகியவற்றுடன்–

குறைந்தபட்ச வேலைத் திட்டமாக முக்கிய அரசியல் பிரச்சனை குறித்து ஒன்றுகூடி கலந்து ஆலோசித்து முடிவெடுப்பதெனவும் ஸ்ரீலங்கா அரச படைகளுக்கெதிரான தமது ஆயுதப்போராட்ட நடவடிக்கைகளை ஒன்றுபடுத்திச் செயல்படுவதெனவும் தீர்மானித்துள்ளதாக அறிவித்திருந்தனர்.

இந்த நான்கு அமைப்புகளும் ஒன்றுபட்ட ஈழதேசிய விடுதலை முன்னணியில் (ENLF) ஆய்வுப் பகிர்வு பிரிவின் (றோ) செல்வாக்கு பலம்பெற்றிருந்தமையால் புலிகளினால் தமது தேவைகளைப் பெருமளவில் பூர்த்தி செய்யமுடியவில்லை. இந்த அமைப்புகளை றோ தனது தேவைகளைப் பூர்த்திசெய்வதில் ஈடுபடுத்தி வந்தது.

ஆயுத மோகம் கொண்டிருந்த ஈழதேசிய விடுதலை முன்னணி "றோ" வின் தூண்டுதலால் இனக்கலவரங்களை உருவாக்கும் வேலைத்திட்டங்களில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டது. கொழும்பில் உள்ள சிறு தொழில்சாலைகள், பொதுமக்கள் கூடும் இடங்கள் ஆகியவற்றில் குண்டுகளை வெடிக்க வைப்பதிலும், சிங்களக் கிராமங்களில் புகுந்து சிங்கள அப்பாவி மக்களைக் கொன்று குவிப்பதிலும் ஈடுபட்டனர். அது மட்டுமல்ல இவர்கள் தமது தொடர்புகளையும், வர்க்க நிலைப்பாட்டையும் அம்பலப்படுத்தும் நடவடிக்கையாக தென்னிலங்கை இடதுசாரிகளுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் (த.வி.கூட்டணி) தர்மலிங்கம் அவர்களையும், ஆலாலசுந்தரம் அவர்களையும் கொலை செய்ததுடன் கூட்டணியில் இடதுசாரிச் சிந்தனையுடைய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான துரைரத்தினம், இராஜலிங்கம் ஆகியோரையும் கொலை செய்ய முயன்றனர். ஆனால் இவர்கள் இருவரும் ரேலோ இயக்கத்தின் வடமராட்சிப் பொறுப்பாளராக அப்போது இருந்த தாஸ் என்பவரின் நல்லெண்ணத்தால் உயிர் தப்பினர். இந்தக் கொலைகளில் சம்பந்தப்பட்ட – ஸ்ரீசபாரத்தினத்தை தலைவராகக் கொண்ட – ரெலோ இயக்கம் வடபகுதியில் தம்மை இராணுவரீதியில் பலப்படுத்தி வந்தது.

த. வி. கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் படுகொலைக்கு

படிப்பகம்

www.padippakam.com



சந்திரகாசனும், "றோ" வும் பின்னணியில் இருந்தனர் என்பதை ரெலோ தலைவர் ஸ்ரீசபாரத்தினம் தெரிவித்திருந்தார்.

ரெலோ இயக்கத்தின் வடமராட்சிப் பொறுப்பாளர் தாஸ், யாழ்ப்பாணப் பொறுப்பாளர் பொபி ஆகியோருக்கு இடையே இருந்த முரண்பாடுகளைத் தீர்க்கவென ஸ்ரீசபாரத்தினம் இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணம் பயணமானபோது இவரைச் சந்தித்த சில பத்திரிகையாளரிடம் "றோ" வும் சந்திரகாசனும் தன்னை ஏமாற்றிவிட்டனர் எனவும் தனது யாழ் பயணம் முடிந்து தமிழ் நாடு திரும்பியதும் அவர்களை அம்பலப்படுத்தப் போவதாகவும் தெரிவித்திருந்தார். யாழ் சென்ற ஸ்ரீசபாரத்தினம் பின்னர் தமிழ் நாடு திரும்பவில்லை.

## ரெலோ தலைவர் ஸ்ரீ கொலை

இந்திய அரசுக்கு (காங்கிரஸ் கட்சிக்கு) எதிராக எதிர்க் கட்சிகள் சேர்ந்து தேசிய முன்னணி ஒன்றை அமைத்தனர். இதில் தி.மு.க., தெலுங்கு தேசம், ஜனதாகட்சி ஆகியன முக்கிய பங்கை வகித்தன. இந்த முன்னணியின் ஆசியுடன் தமிழீழப் போராட்டத்துக்கு ஆதரவாக " தமிழீழ ஆதரவாளர் அமைப்பு" (TESO ) ஒன்று உருவாக்கப்பட்டது. கலைஞர் கருணாநிதி, நெடுமாறன் வீரமணி போன்றோர் இந்த அமைப்பில் முக்கியமானவர்கள்.

இந்த அமைப்பு தமிழீழத்தை அங்கீகரிக்கவென மதுரையில் ஒரு மகாநாட்டை நடத்த ஏற்பாடு செய்தது.

பலஸ்தீன விடுதலை இயக்கத்தைப் போல் ஈழ தேசிய விடுதலை முன்னணிக்கும் ( L.T.T.E.,TELO, EPRLF,EROSS) ஓர் அங்கீகாரத்தை பெற்றுக்கொடுப்பதே இந்த மகாநாட்டின் நோக்கமாக இருந்தது. மகாநாட்டில் தமிழீழத்தை அங்கீகரித்து ஒரு தீர்மானம் நிறைவேற்ற முடிவு செய்திருந்தனர். கலைஞர் கருணாநிதி , தெலுங்கு தேசம் கட்சித் தலைவரும் ஆந்திர முதல்வருமான என்.ரி.ராமராவ், ஜனதா கட்சியை சேர்ந்த சந்திரசேகர் ஆகியோர் இந்த மகாநாட்டில் கலந்து கொள்வதாக இருந்தனர்.

தமிழ் நாட்டில் அ.தி.மு.க. அரசுக்கெதிரான தி.மு.க.வின் நடவடிக்கைகளுக்கு ரெலோவும் உதவி வந்தன. தி.மு.க. வுக்காக தமிழக அரசுக்கெதிரான சில சட்டவிரோத நடவடிக்கைகளில் ரெலோவை தி.மு.க. பயன்படுத்தி வந்தது.

தமிழ் நாட்டில் நடந்த ரயில் குண்டு வெடிப்புச் சம்பவங்களில் ரெலோவுக்கு தொடர்பு இருந்ததாக சில ரெலோ உறுப்பினர்கள் கைது

படிப்பகம்

www.padippakam.com



செய்யப்பட்டு வழக்கு தொடரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த வகையில் கலைஞர் கருணாநிதி ரெலோவை முதன்மைப்படுத்த, ரெசோ மகாநாட்டுடன் ஈழதேசிய விடுதலை முன்னணிக்கு தலைவராக ஸ்ரீ சபாரத்தினத்தைக் கொண்டு வரும் நோக்குடன் செயல்பட்டார்.

ஒருபுறம் ரெசோ மகாநாட்டுக்கான ஒழுங்குகள் நடைபெறும் அதே வேளை மகாநாடு நடைபெறாது குழப்பும் முயற்சியில் மத்திய அரசும், மாநில அரசும் செயல்பட்டன.

இம்மகாநாடு நடைபெற்று முடிந்தால் மத்திய அரசின் பிடியில் இருந்து ஈழதேசிய விடுதலை முன்னணி விடுபடலாம் என மத்திய அரசும், இந்த மகாநாட்டின் மூலம் கருணாநிதிக்கு தமிழ்நாட்டில் செல்வாக்கு பெருகலாம் என மாநில அரசும் அஞ்சின.

இதன் பின்னணியில் "றோ" ஸ்ரீசபாரத்தினத்தை யாழ்ப்பாணம் சென்று சில ராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படியும் அதன் மூலம் ரெலோவின் உள்விவகாரப் பிரச்சனைகளும் தீர்க்கலாம் என ஆலோசனை கூறி ஆயுதங்களும் வழங்கினர்.

அதே வேளை புலிகளுக்கும் "றோ" ஆயுதங்களை கடலில் வைத்து வழங்கியது. இந்த ஆயுதம் தமிழ் நாட்டில் மல்லிகைப்பந்தலில் உள்ள புலிகளின் கரைத்தளத்தில் இறக்கப்பட்டு யாழ்ப்பாணம் அனுப்பப்பட்டன. இந்த ஆயுதம் வெளிநாட்டில் இருந்து கொண்டுவரப்பட்டதாக புலிகள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் ரெலோ இயக்கத்தின் உள்முரண்பாடுகள் வலுவடைந்த நிலையில் தமிழ்நாட்டில் இருந்து ஸ்ரீசபாரத்தினம் யாழ் பயணமானார். அங்கு அவரால் தாஸ், பொபி ஆகியோருக்கிடையில் இருந்த முரண்பாடுகளைத் தீர்க்க முடியவில்லை. ஆனால் யாழ் மருத்துவ மனையில் வைத்து தாஸ் சுட்டு கொல்லப்பட்டார்.

தாஸ் கொலையை அடுத்து ஏற்பட்ட மக்கள் ஆர்ப்பாட்டங்களும் அதை அடக்க ரெலோ கையாண்ட முறைகளும் மக்களுக்கு ரெலோ மேல் வெறுப்புணர்வை ஏற்படுத்தியது. ரெலோ சிவில் நிர்வாகத்தை கையேற்று நடைமுறைப்படுத்த முற்பட்டபோது அவர்களுடைய நடவடிக்கைகளால் மக்கள் ரெலோ மேல் மேலும் வெறுப்படைந்தனர்.

இந்த நிலமை புலிகளுக்கு சாதகமாக அமைந்தது.

படிப்பகம்

www.padippakam.com



ரெலோ இயக்கத்தின் சில இராணுவ நடவடிக்கைகள் புலிகளின் இராணுவ நடவடிக்கைகளை இரண்டாம் நிலைக்குத் தள்ளியதனால் அச்சம் கொண்டிருந்த புலிகள் எந்தவகையிலாவது தமது இராணுவ மேலாதிக்கத்தைக் காப்பாற்ற வேண்டும், முடிவே முக்கியம்., வழிகளல்ல! வழிகளை முடிவு நியாயப்படுத்திவிடும் என்ற நம்பிக்கையில் ரெலோ இயக்கத்தை – அவர்களுடைய கூட்டமைப்பில் ஒன்றான தோழமை இயக்கத்தை- அதன் தலைவரை. 86 மே 6ம் திகதி அழித்தனர். இதிலும் "றோ" வின் பங்குண்டு என நம்பப்படுகிறது.

100 க்கு மேற்பட்ட ரெலோ உறுப்பினர்களும், ஸ்ரீசபாரத்தினமும் கொலை செய்யப்பட்டதை அடுத்து ரெலோவின் முக்கிய தலைவர்கள் புளொட் இயக்கத்தின் துணையுடன் தமிழ் நாடு சென்றனர்.

1986 ஏப்ரல் 27ம் திகதி புலிகளினதும், ரெலோவினதும் படகுகள் கடற்படையினரால் தாக்கப்பட்டு இருதரப்பிலும் 16 போராளிகள் பலியானார்கள். இவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு இருதரப்பினரும் கூட்டாக அஞ்சலி சுவரொட்டிகளை ஒட்டினர். அப்போ ஏற்பட்ட ஒரு சம்பவத்தில் புலிகளின் அமைப்பாளர் ஒருவரை ரெலோவினர் விசாரணைக்கு அழைத்துச் சென்று துன்புறுத்தியதாகவும் அதற்கு பழிவாங்கும் நடவடிக்கையாகவே ரெலோமீது புலிகள் தாக்குதல் நடத்தியதாகவும் ஆரம்பத்தில் காரணம் கூறப்பட்டது.

ஆனால் புலிகளின் வெளிநாட்டு செய்திச் சேவை **" ரெலோவை இந்தியா வளர்க்கிறது. அப்படி வளர்த்து தமிழீழம் தவிர்ந்த தீர்வொன்றுக்கு ரெலோவை சம்மதிக்க வைப்பதன்மூலம் தமிழீழப் போராட்டத்தை அழிக்க முனைகிறது. அதனால் ரெலோவை அழிக்க முனைகிறோம்".** எனக் கூறியது.

ஆனால் புலிகள் 1987 ல் தமிழீழம் தவிர்ந்த தீர்வான இலங்கை இந்திய ஒப்பந்தத்தை உருவாக்குவதில் தமது முழு பங்களிப்பையும் செலுத்தி பின்னர் அந்த ஒப்பந்தம் பற்றி ஏனைய தமிழ் அமைப்புகளுடனும் இந்தியா ஆலோசனை நடத்த முற்பட்டதையடுத்து புலிகள் அந்த ஒப்பந்தத்துக்கு எதிராக முரண்பட்டதும் பின்னர் அந்த ஒப்பந்தத்தை ஏற்பதற்கு இந்தியா மாதாந்தம் 50 லட்சம் ரூபா புலிகளுக்கு கொடுக்க ஒப்புக் கொண்டதும் அதையடுத்து புலிகள் யாழ்சென்று இந்தியப் படையிடம் ஆயுதங்களை ஒப்படைத்து மன்னிப்புக் கடிதம் பெற்றதும் ஒரு வரலாறாகும்.

அதுமட்டுமல்ல இன்னொரு வரலாறும் உண்டு.

1988ம் ஆண்டு பிரதமராக இருந்த பிரேமதாசாவுக்கும் புலிகளுக்கும் இடையே ஒரு பேச்சுவார்த்தை நடைபெற்றது. இந்தப் பேச்சுவார்த்தையின்

போது வடபகுதி நிர்வாகத்தை தாங்கள் பொறுப்பேற்பது என்றும் கிழக்கு மாகாண நிர்வாகத்தை இலங்கை இராணுவத்திடம் கொடுப்பது எனவும் புலிகளால் ஒப்புக்கொள்ளப்பட்டது. இதைத் தொடர்ந்து அக்காலத்தில் பாதுகாப்பு அமைச்சராக இருந்த லலித் அத்துலத் முதலி புளொட் இயக்கத்தினரைச் சந்தித்து புலிகளின் அந்த ஏற்பாட்டை ஏற்று புலிகளுடன் இணைந்து செயல்படுமாறு கூறினார். அதற்கு புளொட் இயக்கம் மறுத்து வடக்கு கிழக்கு இணைந்த மாநிலம் தவிர்ந்த எந்தத் தீர்வுக்கும் தாம் தயார் இல்லை எனத் தெரிவித்தனர். இந்தப் பேச்சுவார்த்தை இந்தியாவின் தலையீட்டால் ஜே.ஆர். மூலம் தடுத்துநிறுத்தப்பட்டன. இலங்கை அரசின் ஆதரவுடன் தாம் ஆள்வதற்கு வடபகுதியை பெற கிழக்கை தாரைவார்க்க தயாராக இருந்தவர்கள்தான் இந்தப் புலிகள்.

புலிகள் இயக்கம் தமது சகோதர யுத்தத்தை நிறுத்தியிருந்தால் இன்று தமிழீழத்தில் தோன்றியுள்ள பேரழிவுகளைத் தவிர்த்திருக்கலாம். ஆனால் புலிகளோ தமிழீழத்தில் ஏகபோக இராணுவ மேலாதிக்கத்தை தாமே பெறவேண்டும் என்ற நோக்கில் ஏனைய இயக்கங்களைச் செயல்படாது தடை செய்தனர்.

ஆயுதம் இல்லாத நிலையில் இராணுவ ரீதியில் பலம் குன்றியிருந்தாலும் புளொட்டுக்கு மக்களிடையே செல்வாக்கிருந்ததால் புலிகள் அவர்களைத் தடை செய்யத் தயங்கினர். அதே வேளை இவ்விரு இயக்கங்களையும் தடை செய்யாததன் மூலம் புலிகள் தம்மை ஜனநாயகவாதிகள் எனவும் காட்ட முனைந்தனர். அதே வேளை புலிகளுக்கு ஊதுகுழலாகச் செயல்பட்டு வந்த ஈரோஸ் இயக்கத்தை தடை செய்ய அவர்கள் அக்கறைப் படவில்லை.

புளொட் இயக்கத்தை பகிரங்கமாக தடைசெய்யாத போதிலும் புலிகள் அந்த அமைப்பு செயல்படாத விதத்தில் நிர்ப்பந்தங்களை உருவாக்கினர். அதே நேரத்தில் தாம் புளொட் இயக்கத்தை தடைசெய்யவில்லை என பத்திரிகைகளில் அறிக்கைகளும் விட்டனர்.

ஆனால் சில நாட்களில் –மீண்டும் ஒரு சகோதர யுத்தம் ஏற்படக்கூடாது என்பதற்காக வடக்கு கிழக்கில் தமது இராணுவ ரீதியான பாதுகாப்பு நடவடிக்கைகளை தற்காலிகமாக இடை நிறுத்துவதாக புளொட் இயக்க இராணுவப் பொறுப்பாளர் மென்டிஸ் அறிவித்திருந்தார்.

இதையடுத்து புலிகள் வடக்கு கிழக்கில் தமது ஏகபோக இராணுவ மேலாதிக்கத்தை ஸ்திரப்படுத்தத் தொடங்கினர். அதன் விளைவு ஏனைய இயக்கத்தவர்கள் புலிகளால் கைதுசெய்யப்பட்டு துரோகிகள், சமுகவிரோதிகள் என குற்றம் சாட்டப்பட்டு கொலை செய்யப்பட்டனர்.

www.padippakam.com


" எம்மிடம் இருக்கின்ற துப்பாக்கிகள் எமது மக்களை அழிப்பதற்கல்ல, எதிரிகளை அழிப்பதற்கும் எமது மக்களைக் காப்பதற்கும் பயன்படவேண்டும்" என்ற கோட்பாட்டை மறந்தனர் புலிகள்.

புளொட் இராணுவப் பொறுப்பாளர் மென்டிஸ் 86 டிசெம்பர் 13ம் திகதி பேசுவதற்கு என புலிகளால் அழைத்துச் செல்லப்பட்டார். நீண்டகாலம் இந்தியாவில் தஞ்சம் அடைந்திருந்த புலிகளின் தலைவர் பிரபாகரன் நாடு திரும்பினார். அதன் பின்னர் மென்டிஸ் துரோகி எனக் குற்றம் சாட்டப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு 11.01.87 ல் கொலை செய்யப்பட்டார். இவர் கொலையை அடுத்து புளொட்டின் உள்முரண்பாடுகளால் ஒதுங்கியிருந்த உறுப்பினர்கள் பலர் மீண்டும் அவ்வியக்கத்தில் சேர நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

# புளொட் இயக்கத்தில் பிளவு

ஆயுதமற்ற நிலையில் புளொட் இயக்கம் போராட்டத்தில் ஈடுபடாவிட்டாலும் மக்களைப் பாதுகாக்கும் வேலைகளில் ஈடுபட்டு மக்கள் இயக்கமாக வளர்ச்சியடைவதை "றோ" வினால் ஜீரணிக்கமுடியவில்லை .இதனால் புளொட் இயக்கத்தில் உள் முரண்பாடுகளை உருவாக்கி இயக்கத்தை அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

இதற்கு புளொட் இயக்கத்தின் இராணுவப் பயிற்சியாளராக இருந்த சேகர் மாஸ்டர் என அழைக்கப்படும் இராஜமனோகரன் என்பவர் உடந்தையாக இருந்தார்.

இவர் தமிழ் நாட்டில் நக்சல்பாரி என அழைக்கப்படும் மாக்சிச தீவிரவாதக் குழு ஒன்றில் இருந்தவர். இவர் முன்னாள் இந்திய கடற்படை வீரருமாவார். புளொட் இயக்கத்தில் இராணுப் பயிற்சியாளராக இருந்த போது இவர் சிறந்த மாக்சியவாதியாகவும் தன்னை இனம் காட்டிக்கொண்டார்.

இவர் புளொட் இயக்கத்தை உடைக்கும் முதல் வேலையாக இயக்கத்தின் முன்னணி உறுப்பினரான சந்ததியார் உட்பட பலர் வெளியேறுவதற்கான சூழ்நிலைகளை உருவாக்கினார். இந்தச் சதியில் புளொட் இயக்கத்தில் அரசியல் வகுப்புகள் நடத்திவந்த தங்கராசா மாஸ்டர் என்பவர் முக்கிய நபராவார். இந்த இரு மாக்சிசவாதிகளும் புளொட் இயக்கத்தின் முன்னணி உறுப்பினராக இருந்து பின்னர் இயக்கத்தில் இருந்து வெளியேறிய அல்லது வெளியேற்றப்பட்ட சந்ததியாரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள். தங்கராசா மாஸ்டர் 1971 ம் ஆண்டு அரசுக்கெதிராக வன்முறைகளில் ஈடுபட்ட தென்பகுதி தீவிரவாத இயக்கமான ஜே. வி. பி. யின் பிரதிநிதியாக

படிப்பகம்

மலையகத்தில் வேலைசெய்தவராவார். இவர் மேற்படி இயக்கத்துடன் ஏற்பட்ட முரண்பாடுகாரணமாக அதிலிருந்து விலகி 1983 ம் ஆண்டுக்குப்பின்னர் புளொட் இயக்கத்தில் சேர்ந்தவர். சந்ததியார் இயக்கத்திற்கு எதிராக செயல்படுவதாக இவர் கொடுத்த தகவல் அடிப்படையில்தான் சந்ததியார் இயக்கத்தில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டார். அதே நேரம் தங்கராசா மாஸ்டர் தலைமறைவானார். இவர் தலைமறைவானபோது இவர் இயக்கத்தால் கொலைசெய்யப்பட்டார் என நம்பப்பட்டது. ஆனால் இயக்கத்தில் இரண்டாவது முறையாக பிளவு ஏற்பட்டபோது இவர் ஈஸ்வரன் குழுவினருடன் இணைந்து செயல்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இயக்கத்தை உடைக்கும் வேலையில் ஆரம்பகாலத்தில் இரகசியமாகச் செயல்பட்டு வந்த சேகர் மாஸ்டர் பின்னர் பகிரங்கமாகவே செயல்பட்டு ராஜன், ஈஸ்வரன், ஆதவன், போன்றோரை இயக்கத்துக்கு எதிராக செயல்பட வைத்து இரண்டாவது முறையும் புளொட் இயக்கத்தில் பிளவை ஏற்படுத்தி தானும் வெளியேறி ஈ. என். டி.எல்,. எவ், என்ற அமைப்பை உருவாக்க துணைநின்றார். இவர்தான் பின்னர் வடக்கு கிழக்கு மாகாணசபையால் உருவாக்கப்பட்ட தேசிய இராணுவத்திற்கும் மாகாண முதல்வருக்குமிடையே தொடர்பாளராக கடமையாற்றிய "ஆதவன்மாஸ்டர்" என்பது குறிப்பிடத்தக்கது.

## ஈ.என்.டி.எல்.எவ். – ஈ.பி.டி.பி. ஆகிய அமைப்புகளின் தோற்றம்

இந்தியாவில் புளொட் இயக்கத்தை சிதைக்கும் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் அதே வேளை தளத்திலும் இந்த இயக்கத்தில் உள் முரண்பாடுகள் வளர்க்கும் வேலைகள் நடந்துகொண்டிருந்தன. இதில் முன்னணியில் இருந்தவர் சுப்பையா என்றழைக்கப்படும் கௌரிகாந்தன் என்பவராகும்.

இவர் ஆரம்பகாலத்தில் பல அமைப்புகள், கட்சிகளில் இருந்து அங்கிருந்து-வெளியேறியும் வெளியேற்றப்பட்டவருமான ஒருவர். இவர் எந்த அமைப்பிலும் தொடர்ந்து இருக்கமுடியாததால் கிராமிய உழைப்பாளர் சங்கம் என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தி அதற்கு வெளிநாட்டு நிதி நிறுவனங்களின் உதவியை பெற்று வந்தார்.

கௌரிகாந்தன் எந்த அமைப்பில் சேருகிறாரோ அந்த அமைப்பில் அல்லது கட்சியில் உள்முரண்பாடுகள் ஏற்பட்டு அந்த அமைப்பு அல்லது

www.padippakam.com



கட்சியில் பிளவு ஏற்படுவது வழக்கம் என பலர் நகைச்சுவையாக கூறுவது உண்டு. 1984 ம் ஆண்டில் கிராமிய உழைப்பாளர் சங்கத்தைச் சேர்ந்த சிலர் ஈ. பி. ஆர். எல்.எவ். இயக்கத்திலும், கௌரிகாந்தன் தலைமையிலான சிலர் புளொட் இயக்கத்திலும் சேர்ந்தனர். இதன் பின்பு புளொட் இயக்கத்தின் அரசியல் பிரிவு கௌரிகாந்தனையே தமது மாக்சிச ஆசானாக ஏற்றுக்கொண்டது.

இவருடைய பின்னணியில் புளொட் இயக்கத்தை புனரமைப்பு செய்யவென தளத்தில் (யாழ்ப்பாணம் கந்தரோடையில்) 1986 ல் ஒரு மகாநாடு நடத்தப்பட்டது. இந்த மகாநாட்டில் கௌரிகாந்தன் பேசும்போது தான் தமிழீழக் கோரிக்கையை எந்தக்காலத்திலும் ஏற்றுக்கொண்டவனல்ல எனக் கூறியிருந்தார். அப்படியான கருத்தைக் கொண்டிருந்த இவர் தமிழீழக் கோரிக்கையை முன்வைத்துப் போராடிய அமைபுடன் ஏன் சேர்ந்தார் என்பதோ அல்லது இப்படிப்பட்ட ஒருவரை புளொட் இயக்கம் ஏன் தன்னுடன் இணைத்துக் கொண்டது என்பதோ எவருக்குமே புரியாத புதிராக உள்ளது. இதே கௌரிகாந்தன் இபோது புலிகளுடன் புலிகளின் தவறான நடவடிக்கைகளை நியாயப்படுத்தி மாக்சிச விளக்கங்கள் கொடுத்துக்கொண்டிக்கிறார்.

புளொட் இயக்கத்தின் தளமகாநாட்டின் அடிப்படையில் 1986 ஜுலை மாதம் தமிழ் நாட்டில் ஒரு மகாநாடு நடத்தப்பட்டது. இந்த மகாநாட்டில் கௌரிகாந்தனும் கலந்துகொள்ளவென தமிழ்நாடு சென்று பின்னர் அதில் அவர் கலந்துகொள்ளவில்லை. அவரையடுத்து ஈஸ்வரன் தலைமையில் ராஜன், ஆதவன், சேகர் மாஸ்டர், உட்பட சிலர் வெளியேறினர்.

இந்த மகாநாட்டில் கலந்துகொள்ளாத ஈஸ்வரன், ராஜன், சேகர் மாஸ்டர் உட்பட சில மத்தியகுழு உறுப்பினர்களை வெளியேற்றுவதென மகாநாட்டில் தீர்மானம் எடுக்கப்பட்டு அறிக்கைகள் தமிழகப் பத்திரிகைகளில் வெளிவந்தன. அதேவேளை இப்படி வெளியேற்றப்பட்டவர்களும் தாமே உண்மையான புளொட் இயக்கம் என அறிக்கைகள் வெளியிட்டதுடன் புளொட் இயக்கத்தின் உத்தியோகபூர்வ ஏடான " புதியபாதை" யை தாமும் வெளியிட்டனர். இதனால் உமாமகேஸ்வரன் தலைமையில் ஒரு புளொட் இயக்கமும் ஈஸ்வரன் தலைமையிலான ஒரு புளொட் இயக்கமும் உரிமை கோரப்பட்டு வந்தன.

இதே காலகட்டத்தில் உள்முரண்பாடுகள் காரணமாக ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தில் இருந்து அதன் நிதிப்பொறுப்பாளர் டேவிற்சன் (ஈழமணி) தள இராணுவப் பொறுப்பாளர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் வெளியேறினர், அல்லது வெளியேற்றப்பட்டனர். இதனையடுத்து பத்மநாபா தலைமையிலும் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலும் ஈ.பி. ஆர். எல். எவ். இயக்கம் உரிமை

படிப்பகம்

www.padippakam.com



கோரப்பட்டன.

"றோ" ஈஸ்வரன் தலைமையிலான புளொட்டுக்கும் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ. பி. ஆர்.எல். எவ். இயக்கத்துக்கும் ஆதரவுவழங்கிவந்தனர். ஆனால் தமிழக அரசு, மத்திய அரசு ஆகியவற்றுடன் பத்மநாபா, உமாமகேஸ்வரன் ஆகியோரே நன்கு அறிமுகமாகி இருந்ததாலும் தமிழ் நாட்டு மக்களிடையேயும், அரசியல் கட்சிகளிடையேயும் இவர்களே செல்வாக்குப் பெற்றிருந்ததாலும் பத்மநாபா, உமா தலைமையிலான இயக்கங்களே அங்கீகரிக்கப்பட்டிருந்தன. ஈ. பி. ஆர். எல். எவ். (பத்மநாபா) இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சிகளுடனும், புளொட்(உமா) கம்யூனிஸ்ட் கட்சிகளுடனும், மாநிலக்கட்சிகளான தி.மு.க. , அ. தி. மு .க. கட்சிகளுடனும் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தனர்.

இயக்கங்களை உடைப்பதில் வெற்றிகண்டு அவர்களிடையே நடைபெறும் மோதல்களில் குளிர்காய்ந்த "றோ" வுக்கு 1987 பெப்ரவரி மாதம் சென்னையில் உள்ள புளொட் காரியாலயத்தின் மீது ஈஸ்வரன் குழுவினர் தாக்குதல் நடத்தி அங்கு ஒருவர் கொலையான சம்பவம் ஒரு இக்கட்டான நிலையைத் தோற்றுவித்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் இந்திய அரசு விடுதலை இயக்கங்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்த எண்ணியது. இந்தப் பேச்சுவார்த்தைக்கு பத்மநாபா தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தையும் உமா தலைமையிலான புளொட் இயக்கத்தையுமே அழைக்கவேண்டி ஏற்பட்டதால் "றோ" தங்களால் உருவாக்கப்பட்ட ராஜன்(முன்னர் ஈஸ்வரன் குழு) குழுவினரையும், டக்ளஸ் தேவானந்தா குழுவினரையும் காப்பாற்றும் நோக்கில் இரு குழுவினரையும் இணைத்து ஈ.என்.டி.எல்.எவ். என்ற பெயரில் புதிய அமைப்பை உருவாக்கினர். அதைத் தொடர்ந்து அதுவரைகாலமும் தமிழ் போராளிக் குழுக்களில் மத்திய, மாநில அரசுகளால் அங்கீகரிக்கப்பட்டு பேச்சுவார்த்தைக்கென அழைக்கப்பட்ட அமைப்புகளான த. வி. கூட்டணி, புலிகள், புளொட், ரெலோ, ஈ. பிஆர். எல். எவ். , ஈரோஸ் ஆகிய ஆறு அமைப்புகளுடன் ஏழாவது அமைப்பாக ஈ.என்.டி.எல்.எவ். அமைப்பும் மத்திய, மாநில அரசுகளுடனான பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள அழைக்கப்படலாயிற்று.

ஈ.என்.டி.எல்.எவ். இயக்கத்தை உருவாக்கிய "றோ" அதையும் உருப்படியாக உருவாக விடவில்லை. டக்ளஸ் தேவானந்தா சென்னையில் இல்லாதபோது ராஜன் மத்திய அரசுடன் பேச டெல்லி அழைத்துச் செல்லப்பட்டார். அதைத் தொடர்ந்து "றோ" வின் சில நடவடிக்கைகள் டக்ளஸ் தேவானந்தா, ராஜன் ஆகியோருக்கிடையே முரண்பாடுகளைத் தோற்றுவித்தது. இதையடுத்து டக்ளஸ் தேவானந்தா ஈ.என்.டி.எல்.எவ். இயக்கத்தில் இருந்து வெளியேறினார்.

1990 வரை சென்னை சிறையில் இருந்த டக்ளஸ் தேவானந்தா தனது

படிப்பகம்

www.padippakam.com



தந்தையார் மூலம் ஈ.பி.டி.பி. என்ற பெயரில் இலங்கையில் ஒரு அரசியல் கட்சியைப் பதிவு செய்தார். அதன்பின்னர் இலங்கை வந்த டக்ளஸ் தேவானந்தா தமிழ் இயக்கங்கள் அனைத்தும் புலிகளுக்கு ஆதரவளிக்கவேண்டும் என தீவரமாக இருந்தார்.

# தமிழீழ விடுதலை இயக்கத்தில் (ரெலோ) பிளவு.

1987 மார்ச் மாதம் ரெலோ இயக்கத்தில் பிரத்தியேக அரசியல் வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன., இயக்கத்தில் பலர் ஆயுதக் கவர்ச்சியினால் ஈர்க்கப்பட்டு வந்தவர்கள் என்பதாலும் சிலர் இனப் படுகொலையின் பாதிப்பை நேரடியாக உணர்ந்து வந்தவர்கள் என்பதாலும் இவர்கள் அரசியல் வகுப்பில் ஆர்வமின்றி ஆயுதப்பயிற்சி மட்டுமே பெற விரும்பினர். ஸ்ரீசபாரத்தினம் ரெலோவின் தலைவராக இருந்த போதிலும் அவர் இயக்க அமைப்பினுள் போதியளவு ஊடுருவில்லை எனலாம்.

அப்போது இராணுவப் பொறுப்பாளராக ரமேசும் அரசியல் பொறுப்பாளராக சுதனும் இருந்தனர். அரசியல் பொறுப்பாளர் சுதனிடம் இராணுவப் பயிற்சியின் தேவையை பலரும் வலியுறுத்தினர். தாபனத்தைப் பொறுத்தவரை பெண்களை இராணுவப் பிரிவில் இணைப்பதுபற்றி எண்ணம் இருக்கவில்லை. ஆனால் மனோ மாஸ்டர் ( புலிகளில் ஆரம்பகாலத்தில் இருந்து பின்னர் விலகிய ) இந்தியாவில் வைத்தது பெண்களுக்கு பயிற்சி கொடுப்பதின் அவசியத்தை வலியுறுத்திய போதிலும் இராணுவப் பயிற்சி கொடுப்பதை அவரும் ஏற்கவில்லை.

தலைவர் ஸ்ரீ அமைப்பில் போதியளவு ஊடுருவாவிட்டாலும் ஸ்ரீ யின் அமைதியான போக்கும் ,தோழர்களை அணைத்துச் செல்லும் தன்மையும் பலரை தனிப்பட்ட ரீதியில் கவர்ந்துகொண்டது. அவர் சுதன், ரமேஷ், ஆகியோர் மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தார். ஆனால் பிரபாகரன் பற்றிய அவரது அனுபவங்கள் அவரை எப்போதும் எச்சரிக்கையாக இருக்கவைத்தது.

மனோ மாஸ்டர் தளத்தில் அரசியல் செயல்பாடுகளைப் பொறுப்பேற்றிருந்ததால் அவருடைய பிரச்சாரத்திற்கும், தாபனம் பற்றிய கருத்துக்கும் மாறுபட்ட நிலையில் ரெலோ இந்தியாவில் இயங்கியது. இந்திய இராணுவம் இலங்கைக்கு அனுப்பப்பட வேண்டும் என்ற நிலைப்பாடு இயக்கத்துள் பலம் பெற்றிருந்தது. தனித் தலைமையும் அந்தத் தலைமைக்கு முக்கிய ஆலோசகர்களாக பிற்போக்குவாதிகள் இருப்பதாகவும்,

படிப்பகம்

www.padippakam.com


உறுப்பினர்களாக இல்லாதவர்களின் ஆதிக்கம் தாபனத்தில் அதிகரித்து காணப்பட்ட நிலையும் உறுப்பினர்களால் சுட்டிக்காட்டப்பட்டது. தனித் தலைமையை நீக்கி மத்திய கமிட்டி உருவாக்கப்பட வேண்டும் என்றும் இதன் தலைவராக ஸ்ரீசபாரத்தினமே இருக்கலாம் எனவும் கோரிக்கை விடப்பட்டது.

இந்தப் பேச்சுக்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது இராணுவப் பொறுப்பாளர் ரமேஷ், அரசியல் பொறுப்பாளர் சுதன் ஆகியோர் ஸ்ரீசபாரத்தினத்தை கொலை செய்ய முயற்சித்ததாகவும் இவர்கள் றிவோல்வருடனும், குளோரோபோமுடனும் கைது செய்யப்பட்டிருப்பதுடன் அவர்கள் விசாரணையில் குற்றத்தை ஒப்புக்கொண்டிருப்பதாகவும் உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. மேலும் ரமேஷ் இருமுறை பிரபாகரனைச் சந்தித்ததாகவும் றிவோல்வர் பிரபாகரனாலேயே கொடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. கசெட்டில் பதியப்பட்ட அவர்களது ஒப்புதல் வாக்குமூலம் வற்புறுத்தலில் பெறப்பட்டு பின்னர் அவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் உறுப்பினர்கள் மத்தியில் இருந்தது. எனவே அவர்களைக் கொண்டுவந்து பகிரங்க விசாரணை நடத்தவேண்டும் எனப் பலர் வலியுறுத்தினர். அதை தலைமை ஏற்கவில்லை.

இக்கொலை முயற்சி தொடர்பாக வடமராட்சி உறுப்பினர்கள் மேல் சந்தேகம் எழுப்பப்பட்டது. இதனால் பலர் தப்பியோடத் தொடங்கினர். சிலர் நேரடியாகவே புலிகளிடம் அடைக்கலம் பெற்றனர். இச்சம்பவங்களை அடுத்து முகாம்கள் வேறு இடங்களுக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் ஆண், பெண் உறுப்பினர்கள் உட்பட ஒரு பிரிவினர் முகாம் மாற மறுத்துவிட்டனர். இவர்கள் சுதன், ரமேஷை பகிரங்க விசாரணைக்கு கொண்டு வந்து உறுப்பினர்கள் மத்தியில் அவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டால் அவர்களை தாபனத்தில் இருந்து வெளியேற்ற தாம் உடன்படுவதாகவும் தாபன நிலைப்பாட்டுக்கு இதுதான் சரியான வழியென்றும் வலியுறுத்தினர். ஸ்ரீ இவர்களுடன்நேரில் பேசியபோதும் இவர்களுடைய கோரிக்கையை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை.ஆனால் தங்களுடைய கட்டுப்பாடுகளை ஏற்றுவந்தால் இவர்கள் சுதன், ரமேஷை பார்க்க அனுமதிக்கலாம் எனக் கூறினார். இறுதியில் இராணுவப் பயிற்சியை விரும்பிய 6 பெண்கள் அவர்களுடன் செல்ல ஏனையோர் அவர்களுடன் செல்ல மறுத்துவிட்டனர்.

பேச்சுவார்த்தை முறிந்ததும் - ரெலோவின் தனித் தலைமையை நீக்கி மத்தியகமிட்டி அமைக்கப்பட வேண்டும் எனவும், உட்கட்சி ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும், சுதன், ரமேஷை விடுதலை செய்து பகிரங்க விசாரணை செய்யவேண்டும் எனவும் கோரிக்கைகளை வைத்து சென்னை மெரினா கடற்கரையில் சாகும்வரை உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்பட்டது. இதில் 5 பெண்கள் 4 ஆண்கள் பங்குபற்றினர்.

படிப்பகம்

www.padippakam.com


உண்ணாவிரதம் ஆரம்பித்து ஆறாவது நாள் சுதன், ரமேஷ், ஆகியோர் தமிழ்நாடு காவல்துறை கியூ பிரிவின் உதவியுடன் விடுவிக்கப்பட்டதுடன் உண்ணாவிரதம் முடிவுற்றது. சுதன், ரமேஷ் தங்கள் மேல் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டதுடன் தாங்கள் புலிகளின் பாதுகாப்பையே நாடப்போவதாகவும் தெரிவித்தனர்.

உண்ணாவிரதம் இருந்த உறுப்பினர்களிடம் தமது எதிர்காலம் பற்றி குறிப்பிட்ட சுதன், ரமேஷ் ஆகியோர் ரெலோவில் இருந்து பிரிந்தவர்கள் சேர்ந்து புலிகளின் ஆதரவுடன் ரெலோ என்ற பெயரில் தாமும் இயங்கலாம் எனத் தெரிவித்தனர். ஆனால் அவர்களுடைய கருத்து நிராகரிக்கப்பட்டது. கொலை முயற்சி குறித்தும், புலிகளின் பாதுகாப்பை நாடுவது குறித்தும் பெரும்பாலான உறுப்பினர்கள் உடன்பாடில்லாது இருந்தனர். புலிகளின் போக்கை எதிர்ப்பவர்களே பெரும்பாலும் அங்கிருந்தனர். எனவே அவர்கள் ரெலோ என்ற பெயர் அவசியமில்லை எனவும் சரியான கருத்துக்களை வைத்து தனியாக இயங்கலாம் எனவும் புலிகளின் பாதுகாப்பு அவசியமில்லை எனவும் தெரிவித்தனர். இதன்பின்னர் ரமேஷ் மேற்படி குழுவினரை சந்திக்கவில்லை.அதன்பின்னர் ரெலோவில் இருந்து பிரிந்தவர்கள் ரமேஷ் குழு, மனோ மாஸ்டர் குழு என இரு பிரிவுகளாகக் கருதப்பட்டனர்.

ரமேஷ் குழுவினரும் வேறு பலரும் (பாதுகாப்பு கருதி இந்தியா சென்ற உறுப்பினர்களின் உறவினர்கள்) பெண் தோழர்கள் மத்தியில் ரெலோ இவர்களைக் கடத்த முயல்வதாக பிரச்சாரத்தில் ஈடுபட்டு குழப்பத்தை உண்டாக்க பலதடவைகள் முயன்றனர். அங்கு எவ்வித ஆயுதப் பாதுகாப்பும் அற்ற நிலை இருப்பதால் வேறு முகாம்களுக்கு கொண்டு போய் பாதுகாப்பு தருவதாக ரமேஷ் குழுவினர் தெரிவித்தனர். ஆனால் தமக்கு எந்த இயக்கத்தின் ஆயுதப் பாதுகாப்பும் தேவையில்லை என மனோமாஸ்டர் குழுவினர் தெரிவித்தனர். அப்படியிருந்தும் ஒரு இரவு ரெலோ அவர்களைக் கடத்த இருப்பதாகக் கூறி ரமேஷ் குழுவினர் ஆயுதங்களுடன் காவலுக்கு ஆட்களை அனுப்பினர். ஆனால், அவர்கள் உடனடியாக வெளியேறவேண்டும் என பெண்கள் கடுமையாக ஆட்சேபணை தெரிவித்த போது அவர்கள் வெளியேறினர்.

அதன் பின்னர் பெண் உறுப்பினர்களைக் கவனிக்கவென திருமதி நிர்மலா நித்தியானந்தன் பிரபாகரனால் அனுப்பப்பட்டார். ஆனால் அவரது உதவி தங்களுக்குத் தேவையில்லை எனக்கூறி பெண்கள் அவரைத் திருப்பி அனுப்பிவிட்டனர்.

அதே நேரம் பிரபாகரனது காதல் விவகாரம் ராகவனால் விமர்சிக்கப்பட்டு அதன் எதிரொலியாக ராகவனும் அவருடன் 15 பேரும் எல்.ரி.ரி.ஈ.

படிப்பகம்

www.padippakam.com


யிலிருந்து வெளியேறினர்.

மனோ மாஸ்டர் இந்தியாவில் இருந்த எல்லா உறுப்பினர்களையும் தற்காலிகமாக அவர்களது கல்வியைத் தொடர தகுந்த ஏற்பாடுகளைச் செய்யமுயன்றார். விரும்பியவர்கள் தகுந்த பாதுகாப்புடன் வெளியேற அனுமதிக்கப்பட்டனர். இரு பெண்கள் நாட்டுக்கு பெற்றோருடன் அனுப்பிவைக்கப்பட்டனர். ஏனையோரின் எதிர்காலத்திற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்ய மனோ மாஸ்டர் இலங்கை பயணமானார்.

1984 ஜுன் 14 ம் திகதி மனோமாஸ்டர் யாழ்ப்பாணம் திரும்புவதற்கு சூரி என்பவருடன் வந்து வேதாரணியத்தில் நின்ற போது வேறு இயக்க உறுப்பினர்களிடம், தனக்கு புலிகளிடம் இருந்து ஆபத்து இருப்பதாகவும் இயக்கங்கள் பெரும் சிக்கலில் அகப்பட்டுள்ளதாகவும் இது தமிழினத்தை சீரழிக்கப் போகிறது எனவும் தெரிவித்துள்ளார்.

நாடு திரும்பிய மனோ மாஸ்டர் 1984 ஜுலை 22 ம் திகதி பருத்தித்துறையில் உள்ள தம்பசிட்டி என்ற இடத்தில் புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார். புலிகள் இந்தக் கொலையை பகிரங்கமாக உரிமை கோரவில்லை. மனோமாஸ்டர் 1976 ம் ஆண்டு தொடக்கம் 1979 வரை புலிகள் இயக்கத்தில் இருந்தவர். பின்னர் 83 ம் ஆண்டில் ரெலோ இயக்கத்தில் சேர்ந்தவர்.

இந்தியாவில் மனோ மாஸ்டருடன் இருந்த உறுப்பினர்களுக்கு மனோ மாஸ்டர் ரெலோ இயக்கத்தால் கொலைசெய்யப்பட்டதாக ரமேஷாலும் புலிகளாலும் தகவல் கொடுக்கப்பட்டன. ஆனால் நாட்டில் இருந்தவர்களிடம் இருந்து உண்மையான தகவல்களை மனோ மாஸ்டர் குழுவினர் பெற்றுக் கொண்டனர்.

இச்சம்பவத்தையடுத்து இந்தியாவில் உள்ள உறுப்பினர்கள் மத்தியில்தமது எதிர்காலம் பற்றிய கேள்விக் குறி நிலவியது. எல்லோரும் இணைந்த ஒரு அரசியல் நடவடிக்கையில் இறங்கும் உத்தேசம் ஒருவருக்கும் இருக்கவில்லை. பலர் உகந்த சூழ்நிலையில் நாடு திரும்ப விரும்பினர்

இவர்களில் சிலர் சமூக எதிர்ப்பை சந்திக்கப் பயந்தனர். இதனால் இவர்கள் வீடு திரும்ப விரும்பாமல் ஒரு அமைப்புடன் இணைந்து இராணுவப் பயிற்சி பெறவிரும்பினர். அதே நேரம் ரமேஷ் குழுவினர் பெண்கள் மத்தியில் தமது ஆயுத பலம் பற்றியும் ஆயுதப் பயிற்சி பெறவிரும்புவோருக்கு ஆயுதப் பயிற்சி கொடுப்பதாகவும் அதற்கு தங்களுடன் வரும்படியும் வற்புறுத்தினர். இதை தொடர்ந்து 5 பெண்கள் ஆயுதப் பயிற்சிக்கு என ரமேஷ் குழுவுடன் சென்றனர். வணபிதா சின்னராசாவின் உறவினர் எனக் கூறி சோதியா என்ற பெண் அவருடைய

படிப்பகம்

www.padippakam.com



உதவியுடன் கல்வி கற்க போவதாகத் தனது தோழிகள் இருவருடன் வெளியேறினார். வணபிதா சின்னராசா அப்போது புலிகள் இயக்கத்துடனேயே இருந்தார்.

பல்கலைக் கழகத்தில் உண்ணாவிரதம் இருந்தபோது புலிகளால் கடத்தப்பட்ட பெண்களுடன் இவர்களும் ஆயுதப் பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

அதே வேளை ரமேஸ் குழுவில் இருந்த புலி ஆதரவாளர்கள் சிலர் ஸ்ரீசபாரத்தினத்தைக் கொலைசெய்யும் முயற்சியில் தொடர்ந்தும் ஈடுபட்டனர். தண்ணீரில் விஷம் கலக்கப்பட்டது. ஸ்ரீசபாரத்தினத்தை கொலை செய்து விட்டு தலைமைப் பொறுப்பை ரமேஷ் எடுக்கவேண்டும் என்பது பிரபாகரனின் திட்டம். அதற்கு புலிகளின் பூரண ஒத்துழைப்பு கிடைக்குமென பிரபாகரனால் உறுதியளிக்கப்பட்டது. ஆனால் இவர்கள் திட்டம் நிறைவேறுமுன்னர் ரமேஷ் ரெலோவினால் கடத்தி கொலை செய்யப்பட்டார்.

இதையடுத்து ரமேஷ் குழுவினருக்கும் மனோமாஸ்டர் குழுவினருக்குமிடையே இருந்த தொடர்பு துண்டிக்கப்பட்டு ரமேஷ் குழு புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டன. அந்தக் குழுவில் பிரபாகரனை அங்கீகரிக்காத பலர் தப்பியோடி மீண்டும் ரெலோவில் இணைந்தனர். சிலர் உதிரிகளாக இருந்தனர். 5 பெண்கள் புலிகளுடன் இணைக்கப்பட்டு ஆயுதப் பயிற்சிக்கு தயார்படுத்தப்பட்டனர்.

சில காலத்தில் இவர்களில் நால்வர் ராணுவ நடவடிக்கையின்போது இறந்துவிட்டதாக கூறப்பட்டன. ஒருவர் தாயாரால் அழைத்துச் செல்லப்பட்டார்.

## சோதியாவின் மர்ம மரணம்

வணபிதா சிங்கராசாவுடன் சென்ற சோதியா புலிகள் இயக்கத்தில் ஆயுதப் பயிற்சி பெற்று அதில் வெகுவாகக் கவரப்பட்டிருந்தபோதிலும், காலப் போக்கில் தமது தாபன (புலிகளின் சுதந்திரப் பறவைகள்) நடவடிக்கைகள் பற்றி வெறுப்படைந்திருந்தார். ***புலிகள் இயக்கத்தில் பெண்கள் இராணுவ இயந்திரமாகவும், பிரச்சார சாதனமாகவும் மட்டுமே பயன்படுத்தப்படுவது அவருக்கு வெறுப்பூட்டியது.***

இந்த நிலையில் -இந்தியப்படையின் நடவடிக்கைகளின் போது- தனக்கு ஒரு பாதுகாப்பான இடம் தேடித்தரும்படியும் தான் தாபனத்தில் இருந்தது விலகப் போவதாகவும் கொழும்பில் உள்ள தனது தனிப்பட்ட நெருங்கிய நண்பர்களுக்கு கடிதம் எழுதியிருந்தார். அதன்படி அவரது நண்பர்களும்

படிப்பகம்

www.padippakam.com


அவருக்கு பாதுகாப்பான இடம் ஏற்பாடு செய்திருந்தனர்.

அதே வேளை அவர் மூளைக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டு மரணமடைந்ததாக அவரது சொந்த ஊரான நெல்லியடியில் அவரது மரண ஊர்வலம் மிகவும் ஆடம்பரமாக, கவர்ச்சிகரமாக நடைபெற்றது. அஞ்சலிக் கூட்டமும் பெரிதாக நடைபெற்றது. ஆனால் இவர் மரணத்தில் பல சந்தேகங்கள் எழுந்தன.

## தயாநிதி கொலை

புலிகள் இயக்கத்தில் இருந்து ராகவனுடன் வெளியேறிய 15 பேரில் தயாநிதி என்பவர் ஒருவர். இவர் தமிழீழப் போராட்டத்தில் மீண்டும் ஈடுபடமாட்டேன் என உறுதியளித்து புலிகளுக்கு கடிதம் எழுதிக் கொடுத்துவிட்டு ஆந்திர மாநிலத்தில் ஒரு சாமியாரின் தயவில் அவருக்குத் தொண்டு செய்துகொண்டிருந்தார். சாமியாரின் பணிப்பின்பேரில் தயாநிதி வேதாரணியம் சென்றார். அங்கு புலிகளால் அச்சுறுத்தப்பட்டு அங்கிருந்த என்.எல்.எவ்.ரி. (NLFT) முகாமில் தஞ்சமடைந்தார். ஆனால் அவரை விசாரணைக்கு அழைத்துச் சென்ற புலிகள் அடித்து சித்திரவதை செய்து கொலை செய்ததுடன் அந்த உடலை நடுக்கடலில் வீசினர்.

ஆறு மாதம்வரை தயாநிதி கொலை செய்யப்பட்ட விடயத்தை பெற்றோருக்கு மறைத்து தயாநிதி எழுதியதாக கடிதங்கள் வீட்டிற்கு புலிகள் அனுப்பியிருந்தனர். ஆறு மாதத்தின் பின்னர் தயாநிதி பயிற்சியின் போது விபத்தில் இறந்தார் என அறிவித்து அவருடைய அஸ்தி என பெற்றோரிடம் சாம்பல் ஒப்படைக்கப்பட்டது.

## யாழ் குடா நாட்டில்- இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கை

யாழ் குடாநாட்டில் சகல இயக்கங்களும் செயல்பட்டபோது இலங்கை அரசு தமிழீழத்தில் அரசியல்ரீதியாக மிகவும் பலவீனமுற்றிருந்தது. அதனால்தான் 1984, 85, ம் ஆண்டுகளில் இலங்கை இராணுவம் யாழ் குடா நாட்டில் அரசியல்ரீதியாகவும், யாழ் குடா நாடு தவிர்ந்த ஏனைய இடங்களில் குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் இராணுவ ரீதியாகவும் செயல்பட்டது. யாழ் குடாநாட்டில் இராணுவம் முகாம்களில் முடங்கியிருக்க கிழக்கில் இராணுவ நடவடிக்கைகள் மூலம் தமிழர்களை அழித்ததுடன் அகதிகளாக்கியும் வந்தது.

இச்சந்தர்ப்பத்தில் புலிகளின் இராணுவ மேலாதிக்க வெறியினால் ஏனைய விடுதலை இயக்கங்கள் செயல்படாது புலிகளால் தடைசெய்யப்பட்ட

படிப்பகம்

www.padippakam.com



பின்னர் வடக்கில் அரசியல்ரீதியாக பலவீனமுற்றிருந்த இலங்கை அரசு புதிய உத்வேகம் பெற்று குடாநாட்டில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள எண்ணியது. அதன் முதல் கட்ட நடவடிக்கையே வடமராட்சித் தாக்குதலாகும்.

வடமராட்சித் தாக்குதலையும் அதன் இலகுவான வெற்றியையும் தொடர்ந்து ஏனைய முகாம்களில் முடங்கிக்கிடந்த இலங்கை இராணுவத்தினர் முகாம்களை விட்டு வெளியேறி யாழ் குடா நாட்டின் கரையோரங்களில் இருந்து நகரை நோக்கி முன்னேறத் தொடங்கினர்.

தொண்டமானாறு முகாமிலிருந்த இராணுவத்தினர் அச்சுவேலிவரையும், பலாலி முகாமிலுள்ள இராணுவத்தினர் புன்னாலைக்கட்டுவன் வரையும் ,காங்கேசந்துறையிலுள்ள இராணுவத்தினர் தெல்லிப்பளைவரையும் எவ்வித சிரமம் இன்றி முன்னேறினர்.

இத் தாக்குதலின்போது தமிழ் மக்களின் உயிர், உடமைகளுக்கு ஏற்பட்ட அழிவுகளும் அதனால் ஏற்பட்ட சர்வதேச ஆதரவுகளும் இலங்கைஅரசுக்கு எதிராக தமிழ் மக்களைக் காரணமாக்கி இந்தியா இலங்கையில் தலையிட வழிவகுத்தது. இதன் முதல் கட்ட நடவடிக்கையாக இந்திய விமானங்கள் யாழ் குடாநாட்டில் உணவுப் பொட்டலங்களைப் போட்டது. இந்தியாவின் இந்த நடவடிக்கை காரணமாக இலங்கை இராணுவத்தின் முன்னேற்றம் தடைப்பட்டது. இல்லையேல் யாழ் குடாநாடு முழுவதும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் சில நாட்களிலேயே வந்திருக்கும் .

வடமராட்சித் தாக்குதலுக்குப் பின்னர் அப்போது பாதுகாப்பு அமைச்சராக இருந்த லலித் அத்துலத்முதலி ஆரம்பத் தாக்குதலுக்கு வடமராட்சியைத் தேர்ந்து எடுத்ததற்கான காரணத்தை விளக்குகையில் *"யாழ் நகரத்தை முதலில் தாக்கியிருந்தால் அரசுக்கெதிரான பிரச்சாரத் தாக்கம் உலக நாடுகளில் அதிகமாகி இருக்குமென்பதாலேயே யாழ் குடாநாட்டில் வடமராட்சியை முதலில் தாக்கினோம்"* எனக் கூறியிருந்தார்.

இத் தாக்குதல்பற்றி ஒரு இராணுவ அதிகாரி பத்திரிகைகளுக்கு கருத்து தெரிவிக்கையில் 30 நிமிடநேரத் தாக்குதலில் வடமராட்சியைக் கைப்பற்றியதாக பெருமைப்பட்டார். அந்தளவுக்கு புலிகள் அத்தாக்குதலின்போது படு தோல்வியைத் தழுவினர். ஆனால் அத்தாக்குதலில் தமக்குத்தான் மகாத்தான வெற்றியென புலிகள் பிரச்சாரம் செய்தனர். வடமராட்சித் தாக்குதலில் புலிகளுக்கு கிடைத்த தோல்வியை அவர்களின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் , பின்னர் ஒரு முறை ஏற்றுக்கொண்டு அத் தோல்விக்கு அவர் கூறிய காரணம் வேடிக்கையானது.

படிப்பகம்

www.padippakam.com


*வடமராட்சித் தாக்குதல் எப்போது, என்ன நேரம் மேற்கொள்ளப்படும் என்ற முழு விபரமும் றோ அமைப்புக்குத் தெரியும், ஆனால் றோ எமக்கு பொய் தகவல் தந்தது. யாழ் நகர்மீது இலங்கை இராணுவம் பாரிய தாக்குதல் ஒன்றை நடத்தப் போகிறது. உங்கள் வீரர்களை நகர்புறத்துக்கு நகர்த்துங்கள் என்று றோ கூறியது. அதை நம்பி நாம் குடாநாட்டின் சகல பகுதிகளில் இருந்தும் எம் வீரர்களை யாழ் நகருக்கு நகர்த்தினோம். ஆனால் றோ கூறியது போலன்றி இலங்கை அரசு வடமராட்சியைத் தாக்கியபோது நாம் தோல்வியைத் தழுவ நேர்ந்தது,* என்று அன்ரன் பாலசிங்கம் 19-4-90 அன்று நல்லூரில் நடந்த புலிகளின் எழுச்சி விழாக் கூட்டத்தில் ஒப்புதல் வாக்கு மூலம் அளித்துள்ளார்.(21.4.90 சஞ்சிகைப் பத்திரிகை)

இதன் மூலம் புலிகளின் இராணுவ நடவடிக்கைகளைத் திட்டமிடுவது "றோ" அமைப்பு என்பது அவர்களாலேயே ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்தவகையில் இலங்கையில் இந்தியாவின் அரசியல், இராணுவத் தலைமீட்டுக்கு புலிகள் வழிவகுத்தனர். இதன் பின்னர் ஏற்பட்ட ஒப்பந்தத்தை இலங்கை-இந்திய ஒப்பந்தம் என்று கூறுவதை விட இலங்கை-இந்திய-புலிகள் ஒப்பந்தம் என்று கூறுவதே பொருத்தமாகும்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் இடைக்கால அரசு அதிகாரம் இவர்களுக்கு கொடுக்கப்பட்டது. இதைப் பெருமையுடன் ஏற்றுக்கொண்ட புலிகள் இதன்மூலமாவது மக்களுக்கு ஒரு தீர்வை, ஒரு அமைதியான வாழ்வை ஏற்படுத்த முயலவில்லை, அல்லது புலிகளால் முடியவில்லை எனலாம். ஆனால் தமிழர்களை காக்க வந்தவர்கள் என -இவர்களால் வரவேற்கப்பட்ட இந்தியப் படையுடன் இவர்கள் நியாயமான காரணம் எதுவுமின்றி பின்னர் மோதலில் ஈடுபட்டனர். இந்த மோதலின் போது புலிகள் இயக்கம் முற்றாக அழிக்கப்படுவதை "றோ" அமைப்பு விரும்பவில்லை. புலிகளின் தலைவர்கள் பலமுறை இந்தியப் படையால் சுற்றிவளைக்கப்பட்ட போதெல்லாம் அந்தச் சுற்றிவளைப்பு "றோ" வின் தலையிட்டால் வாபஸ் பெறப்பட்டது. இதை இந்திய அரசியல்வாதியான நெடுமாறனின் அறிக்கையொன்றில் இருந்தே அறியக்கூடியதாக உள்ளது. நெடுமாறன் வன்னிக் காட்டில் பிரபாகரனுடன் தங்கி இருந்ததாகவும் அப்போது அந்த முகாம்கள் பல முறை இந்திய இராணுவத்தால் சுற்றிவளைக்கப்பட்டதாகவும் பத்திரிகைகளில் கூறியிருந்தார்.

இந்தியப் படையுடன் புலிகள் மோதலை ஆரம்பித்தபின்னர் புலிகள் மோசமான அழிவுகளைச் சந்தித்ததுடன் பொதுமக்கள் பலரும் கொல்லப்பட்டனர். தமிழ் மக்களின் சொத்துக்கள் பேரழிவுகளுக்குள்ளாயின. இந்தச் சந்தர்ப்பத்தில் புலிகள் தம்மை மீண்டும் பலப்படுத்தும் நோக்குடன் அன்னையர் முன்னணியினரை யுத்த நிறுத்தம் வேண்டும் எனக்கோரி

படிப்பகம்

www.padippakam.com


உண்ணாவிரதம் இருக்கத் தூண்டினர். இதன் பின்னணியில் மட்டக்களப்பு அன்னையர் முன்னணியினரால் உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் இந்தியப் படையினரோ உண்ணாவிரதம் பற்றி எவ்வித அக்கறையும் காட்டவில்லை. இதனால் பிரபாகரன் சென்னையில் இருந்த கிட்டு மூலம் 10. 03. 88 ல் ரஜீவ்காந்திக்கு கடிதம் ஒன்றை அனுப்பினார்.

அதில்–

"இந்திய– இலங்கை ஒப்பந்தத்தை பொறுத்தமட்டில் அதனை அமுல் செய்ய ஒத்துழைப்பு தருவதாக புலிகள் இயக்கம் உறுதியளித்தது. தமிழர்களின் நலன்களையும் இலட்சியங்களையும் இலங்கை இந்திய ஒப்பந்தம்தான் பாதுகாக்கும் என்று இன்றும் வலியுறுத்துகிறோம். ஆனால் இலங்கை அரசின் இனவெறிப் போக்கு குறித்துதான் அஞ்சுகிறோம். இலங்கை அரசு ஏற்கனவே இலங்கை இந்திய ஒப்பந்தம் தொடர்பாக தமது கடமைகளை நிறைவேற்றத் தவறிவிட்டது. நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று கடந்த 27.02.88 ம் திகதி மட்டக்களப்பு மகளிர் முன்னணியின் கோரிக்கையை கௌரவிக்கும் வகையில் நாங்கள் வெளிப்படையாக அறிவித்தோம். இந்திய அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான அனைத்துப் பிரச்சனைகளுக்கும் நிபந்தனையற்ற வகையில் இன்று பேச்சு நடத்தத் தயாராக இருக்கிறோம் என்பதை அதிகாரபூர்வமாக உங்களுக்கு நான் தெரிவிக்கிறேன். இந்நிலையில் உடனடியாகத் தாக்குதலை நிறுத்தவும், தமிழர் பகுதியில் அமைதி மீண்டும் ஏற்பட, சம்பந்தப்பட்ட பிரச்சனைகளுக்கு தீர்வு காண பேச்சுவார்த்தை தொடங்கவும் வேண்டுகிறேன்". இவ்வாறு பிரபாகரன் ரஜீவ் காந்திக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். இக்கடிதம் 13.03.88 ல் இந்திய தினசரிகளில் வெளிவந்தன. (மேற்குறிப்பிட்டுள்ள கடிதம் சென்னையில் இருந்து வெளிவரும் தினமணி பத்திரிகையில் வெளிவந்தது.)

மட்டக்களப்பில் உண்ணாவிரதம் இருந்த அன்னை ஒருவரின் பிள்ளைகள் தமது தாயாரை – புலிகள் நிர்ப்பந்தமாக உண்ணாவிரதம் இருக்கச் செயதுள்ளதாகவும் அவரைக் காப்பாற்றும்படி தம்மிடம் முறையிட்டுள்ளதாக அந்த அன்னையை இந்தியப் படையினர் மீட்டுச் சென்றனர். அன்னை பூபதி இந்த உண்ணாவிரதத்தில் உயிரிழந்தார்.

## மாகாணசபைத் தேர்தல்

இந்தியப் படையுடனான யுத்தத்தில் புலிகள் மிகவும் பலவீனப்படுத்ததப்பட்ட நிலையில் இந்தியா தாம் எடுத்த நடவடிக்கைகளை நியாயப் படுத்தும் நோக்கில் வடக்கு கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதன்மூலம்

படிப்பகம்

www.padippakam.com



அங்கு அமைதியை ஏற்படுத்திவிட்டோம் என உலகுக்கு காட்ட முனைந்தனர். எனவே வடக்கு கிழக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்த இலங்கைக்கு ஆலோசனை வழங்கினர். அதனை ஏற்றுக்கொண்டு முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா மாகாண சபைத் தேர்தலுக்கான அறிவிப்பை வெளியிட்டார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அப்போதைய இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தீட்சித் அவர்கள் புளொட் இயக்கத்தை அழைத்து மாகாணசபைத் தேர்தலில் பங்குபற்றும்படியும் தேர்தலில் பங்குபற்றினால் இந்தியப் படையினால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள 90 புளொட் உறுப்பினர்களையும் விடுதலை செய்வதாகவும் கூறினார். புளொட் இயக்கம் அதை ஏற்றுக்கொள்ளாததன் மூலம் வடக்குக் கிழக்கில் அமைதிச் சூழலை உருவாக்க அவர்களுக்கு கிடைத்த அரிய வாய்ப்பை தவறவிட்டனர்.

அடுத்து ஈபி.ஆர்.எல்.எவ். ,ரெலோ, . ஈ.என்.டி.எல்.எவ். ஆகிய இயக்கங்களை தீட்சித் அணுகினார். அவர்கள் மாகாணசபைத் தேர்தலில் பங்கு கொள்ள இணங்கினர். ஆனால் முதலில் இணக்கம் தெரிவித்த ரெலோ பின்னர் தேர்தலில் பங்குபற்றாது ஒதுங்கிக்கொண்டது. ஈ.என்.டி.எல்.எவ்., ஈபி.ஆர்.எல்.எவ்., இயக்கங்களுக்கு இந்தியா தனது முழு ஒத்துழைப்பையும் வழங்கி வடக்கில் போட்டியின்றியும், கிழக்கில் போட்டியிலும் அவர்கள் மாகாணசபை அதிகாரத்தைக் கைப்பற்ற வழி செய்தனர்.

## புலிகளின் நிலைப்பாடும் தேர்தல் மோசடிகளும்

மாகாணசபைத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டதும் மாகாணசபைத் தேர்தலுக்கு எதிராக புலிகள் பல அச்சுறுத்தல்களை விடுத்ததுடன் தேர்தல் நடைபெறாது தடுப்போம் எனவும் கூறினர். இந்த நிலையில் வடக்கில் ஈபி.ஆர்.எல்.எவ்., ஈ.என்.டி.எல்.எவ்.,ஆகியன போட்டியின்றி தெரிவு செய்யப்படும் நிலை தோன்றின. அப்போது கொழும்பில் உள்ள சில பிரமுகர்கள் புலிகளை இந்தத் தேர்தலில் சுயேட்சையாகப் போட்டியிடும்படி ஆலோசனை கூறினர். அதற்கு அவர்கள் மறுத்ததுடன் தாம் தேர்தலைக் குழப்பப்போவதாக தெரிவித்தனர். தேர்தல் நடைபெற்றால்தான் தேர்தலைக் குழப்பமுடியும் என புலிகளுக்கு அறிவுறுத்தப்பட்ட பின்னர் கடைசி நேரத்தில் புலிகள் சுயேட்சைக் குழுவாக வன்னி, யாழ் மாவட்டங்களில் போட்டியிட முயற்சி செய்தனர்.

அதே வேளை கடைசிநேரத்தில் யாரும் சுயேட்சையாக போட்டியிடாது தடுக்கும் நோக்கில் இந்தியப் படையினர், தேர்தல் நியமனப் பத்திரம்

படிப்பகம்

www.padippakam.com



சமர்ப்பிக்கும் கடைசி திகதிக்கு முன்னர் சில தினங்களாக வுனியா, யாழ்ப்பாணம் கச்சேரி வளவுக்குள் எவரும் ஐம்பது ரூபாவுக்கு மேல் வைத்திருக்க முடியாது என அறிவித்தனர். இதனால் எவரும் இறுதி நேரத்தில் சுயேட்சையாக போட்டியிட கச்சேரியில் கட்டுப்பணம் செலுத்தமுடியவில்லை. தேர்தலில் போட்டியிடும் இறுதி முயற்சியும் புலிகளுக்கு தோல்வியில் முடிந்தன.

வடமாகாணத்தில் 36 இடங்களுக்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஈ.என்.டி.எல்.எவ். ஆகிய இயக்கங்கள் போட்டியின்றி தெரிவாகின. ஆனால் கிழக்கில் உள்ள 35 இடங்களுக்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈ.என்.டி.எல்.எவ். கூட்டமைப்புடன், ஐ.தே.கட்சி, முஸ்லிம் காங்கிரஸ் ஆகியனவும் போட்டியிட்டன. இதனால் வட–கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் கிழக்கில் நடைபெற்றது. இத் தேர்தலை புலிகளால் குழப்பமுடியவில்லை. தேர்தல் பெயருக்கு நடைபெற்றபோதும் தேர்தலில் பல மோசடிகள் நடந்தன. மக்கள் கலந்து கொள்ளாமலே வாக்குப் பெட்டிகள் நிரம்பின. இதில் ஆச்சரியம் என்னவென்றால் வாக்கு சாவடிகளில் உள்ள மொத்த வாக்காளர் தொகையை விட மேலதிகமான வாக்குகள் பதிவாகியிருந்தன. இதனால் வாக்குகளை எண்ணி முடித்தபின்னரும் தேர்தல் முடிவுகளை அறிவிக்க முடியாத நிலை தேர்தல் அதிகாரிகளுக்கு ஏற்பட்டன.

முன்னர் சுமூகமான சூழ்நிலையில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல்களின்போது பலத்த போட்டிகளின் மத்தியிலும் சராசரி 60% வாக்குகளே பதிவாகிவந்தன. ஆனால் மாகாணசபைத் தேர்தலின் போது சில வாக்குச் சாவடிகளில் 105% வாக்குகளும் பதிவாகியிருந்தன. இதனால் தேர்தல் அதிகாரிகளுக்கு முடிவுகளை அறிவிப்பதில் இக்கட்டான சூழ்நிலையைத் தோற்றுவித்தன. இந்த நேரத்தில் இந்தியப்படை அதிகாரிகள் தலையிட்டு இந்த வாக்குகளை பங்கிட்டு தேர்தல் முடிவுகளை அறிவித்தனர். இந்த முடிவுகளின்படி கிழக்கு மாகாணத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஈ.என்.டி.எல்.எவ்., கூட்டமைப்புக்கு 17 உறுப்பினர்களும். முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு 17 உறுப்பினர்களும் ஐ.தே.கட்சிக்கு ஒரு உறுப்பினருமாக பகிர்ந்தளிக்கப்பட்டது. வடக்கு கிழக்கு மாகாண சபையில் உள்ள மொத்தம் 71 இடங்களில் 53 இடங்கள் ஈ.பி.ஆர்.எல்.எவ். கூட்டமைப்புக்கு கிடைத்ததால் வடக்கு கிழக்கு மாகாணசபை நிர்வாகத்தை அவர்கள் ஏற்று அதன் முதல்வராக திரு.வரதராஜப்பெருமாளை தெரிவு செய்தனர்.

இந்த மாகாணசபையின் தலைமையகம் திருகோணமலையில் இயங்கியது. இச்சபை உருவான காலத்தில் வடக்கு கிழக்கு மாகாணத்தின் புனர்வாழ்வு, புனரமைப்புக்கென பல திட்டங்கள் போடப்பட்டு இதற்கான நிதி இலங்கை அரசால் ஒதுக்கப்பட்டதுடன் இந்தியாவிடமிருந்தும் பலகோடி ரூபா நிதியுதவி இச்சபைக்கு கிடைத்தது.

படிப்பகம்

www.padippakam.com



வடக்கு கிழக்கு மாகாணசபையை அரசு என்றழைப்பதா, மாகாணசபை என்றழைப்பதா என்பதில் மாகாணசபையும் இலங்கை அரசும் சிலகாலம் இழுபறிப்பட்டன. வடக்கு கிழக்கு மாகாண சபை நிர்வாகத்திடம் மக்கள் குறிப்பாக கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்கள் பல எதிர்பார்ப்புக்களும், நம்பிக்கையும் கொண்டிருந்தனர். மாகாணசபை முதல்வரும் இலங்கை அரசுடனான நல்லுறவை வளர்த்து வந்தார். பல சந்தர்ப்பங்களில் வடக்கு கிழக்கு மாகாண சபை குறிப்பாக அதன் முதல்வர் மத்திய அரசுடன் தமக்கிருந்த நல்லுறவை பல வழிகளில் நிரூபித்துள்ளார்.

1988 ல் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் அப்போது ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தின் நட்புக் கட்சியான ஐக்கிய சோசலிச முன்னணி வேட்பாளர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட போதும் வடக்கு கிழக்கு மாகாண சபை ஐ.தே.கட்சியின் சார்பில் போட்டியிட்ட பிரேமதாசா அவர்களுக்கே தமது தார்மீக ஆதரவை வழங்கினர். சில இடங்களில் பகிரங்கமாகவும் தமது ஆதரவை வழங்கினர்.

1989 ல் கொண்டாடப்பட்ட இலங்கைக் குடியரசு தினத்தின்போது வடக்கு கிழக்கு மாகாண சபை இலங்கையின் தேசியக் கொடியான சிங்கக் கொடியை ஏற்றிக் கௌரவித்தது.

வடக்கு கிழக்கு மாகாண சபை இலங்கை அரசுடன் சுமூகமான உறவைக் கொண்டிருந்த போதிலும் கூட இந்தியாவும் மாகாணசபைக்கு தனது முழு ஆதரவையும் வழங்கிக்கொண்டிருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் இந்தியா தான் கொடுத்த வாக்குறுதியின்படி மாகாணசபைக்கான அதிகாரப் பரவலாக்கலை வழங்க இலங்கை அரசை நிர்ப்பந்தித்திருக்கலாம். ஆனால் இந்தியாவும் அந்த விடயத்தில் எவ்வித அக்கறையும் செலுத்தவில்லை. மாகாணசபையோ அதற்கு கொடுக்கப்பட்ட அதிகாரங்களையும் சரியான முறையில் நடைமுறைப்படுத்தவில்லை. மாகாணசபையால் சபை உறுப்பினர்கள், அமைச்சர்கள், அவர்களுடைய நெருங்கிய உறவினர்கள், ஆகியோரே புன்வாழ்வு பெற்றனர். வடக்கு கிழக்கில் வேறு எந்த புனர்வாழ்வு வேலைகளும் நடைபெறவில்லை.

மாகாண அரசு அதிகாரத்தைப் பெற்றுக்கொண்ட ஈ.பி.ஆர்.எல்.எவ். ஈ.என்.டி.எல்.எவ். ஆகிய இயக்கங்களால் தமிழர்களுக்கு உரிமையைப் பெற்றுக் கொடுக்க முடியாவிட்டாலும் அவர்கள் அமைதியான வாழ்வையாவது தமிழ் மக்களுக்கு கொடுக்கத் தவறிவிட்டனர். இதன் மூலம் தமிழ் மக்களுக்கு அமைதியான வாழ்வை ஏற்படுத்தக் கிடைத்த இரண்டாவது சந்தர்ப்பமும் நழுவ விடப்பட்டன.

இலங்கை- இந்திய-புலிகள் ஒப்பந்தத்தின் பின்னர் புலிகளுக்கு கிடைத்த இடைக்கால நிர்வாகம் மூலம் வடக்கு கிழக்கில் அமைதியை ஏற்படுத்தக்

படிப்பகம்

www.padippakam.com



கிடைத்த முதலாவது சந்தர்ப்பத்தை புலிகள் தங்கள் அதிகார வெறியால் தவற விட்டமையையும் குறிப்பிடவேண்டும்.

# பாராளுமன்றத் தேர்தல்

ஜனாதிபதித் தேர்தலின் போது பிரேமதாசா முன்வைத்த முக்கிய கோசங்கள் இரண்டு. ஒன்று தான் ஜனாதிபதியாக வந்தால் உடனடியாக இந்தியப்படையை வெளியேற்றுதல். இரண்டாவது பாராளுமன்றத்தை உடன் கலைத்து தேர்தல் நடத்துதல் என்பனவாகும்.

பிரேமதாசா அவர்கள் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டு பதவி ஏற்றதும் பாராளுமன்றத்தைக் கலைத்தார். தேர்தலுக்கான திகதியும் அறிவிக்கப்பட்டது.

இந்தியா இந்தத் தேர்தலில் ஈ.பி.ஆர்.எல்.எவ்., ,ஈ.என்.டி.எல்.எவ்., ரெலோ, த.வி.கூட்டணி, தமிழ்காங்கிரஸ் ஆகியவற்றை ஒன்றிணைத்து ஒரு கூட்டணி அமைக்க முயற்சித்தது. ஆனால் தமிழ் காங்கிரஸ் இந்தியாவின் சில நிபந்தனைகளை ஏற்க மறுத்து தனித்து போட்டியிட முன்வந்தது. எனவே இந்தியாவின் ஏற்பாட்டில் ஈ.பி.ஆர்.எல்.எவ். , ரெலோ, ஈ.என்.டி.எல்.எவ். தமிழர் விடுதலைக்கூட்டணி ஆகியன ஒரு கூட்டமைத்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்னமான உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டன.

அதே வேளை இந்தியாவுக்கு சார்பாகவும் சில வேளைகளில் இந்தியஎதிர்ப்பு வாதத்தை -இந்தியாவின் ஆசியுடன்- வெளிக்கு காட்டிக்கொண்டு இரட்டை வேடம் போட்டு புலிகளுடன் உடன்பாடுகொண்டு இயங்கிய ஈரோஸ் தன்னை ஒரு அரசியல் கட்சியாக பதிவுசெய்து கொண்டிருக்காததால் அவர்கள் இந்தியாவின் அனுசரணையுடனும், புலிகளின் அனுசரணையுடனும் இந்தத் தேர்தலில் சுயேட்சைக் குழுவாகப் போட்டிமிட்டனர்.

புளொட் இயக்கத்தின் அரசியல் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (DPLF) இலங்கையில் இந்தியத் தலையீட்டுக்கு எதிராகவும், மாகாணசபை அதிகாரமற்ற சபை எனவும் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தை மக்கள் முன் வைத்து யாழ் குடாநாட்டிலும், மலையகத்தில் நுவரேலியா மாவட்டத்திலும் போட்டியிட்டது. தமிழ் காங்கிரஸ் யாழ் குடாநாட்டில் மட்டும் போட்டியிட்டது.

மேலும் வடக்கில் முஸ்லிம் காங்கிரஸ், ஐ.தே.கட்சி ஆகியனவும் கிழக்கில் இவர்களுடன் சுதந்திரக் கட்சியும் போட்டியிட்டன.

படிப்பகம்

www.padippakam.com



இந்தத் தேர்தலின்போது வடக்கு கிழக்கில் இந்தியப் படையினரே சட்டம் ஒழுங்கைக் கவனித்து வந்தனர். தேர்தலில் யார் யார் வெற்றி பெறவேண்டும் என்பதை தேர்தலுக்கு முன்னரே இந்தியத் தூதரகம் தீர்மானித்து விட்டது. இந்தியாவின் முழு நோக்கமும் இந்தத் தேர்தலில் மாகாணசபை நிர்வாகத்தை வைத்திருக்கும் ஈபி.ஆர்.எல்.எவ். வேட்பாளர்களையும் புலிகளின் ஆதரவு பெற்ற ஈரோஸ் வேட்பாளர்களையும் வெற்றிபெற வைப்பதேயாகும்.

தமிழர் விடுதலைக் கூட்டணிச் சின்னத்தில் போட்டியிட்ட ஈபி.ஆர்.எல்.எவ். வேட்பாளர்களை வெல்ல வைத்து ஏனையோரை தோற்கடிப்பதன் மூலமும், புலிகளின் ஆதரவு பெற்ற ஈரோஸ் இயக்கத்தை வெல்ல வைப்பதன் மூலமும் தமிழ் மக்களால் அங்கீகரிக்கப்பட்டவர்கள் ஈபி.ஆர்.எல்.எவ். இயக்கமும், புலிகள் இயக்கமுமே என்ற தோற்றத்தை உருவாக்கத் தீர்மானித்து இந்தியா செயல்பட்டது.

ஈரோசை இந்தத் தேர்தலில் வெற்றிபெற வைப்பதன் மூலம் தேர்தல் ஜனநாயக ரீதியில் நடைபெற்ற தேர்தல் என உலகுக்கு காண்பிப்பதுடன் ஈரோஸ் இயக்கத்தின் அமோகமான வெற்றி புலிகளை ஜனநாயக வழிக்குசெல்லத் தூண்டும் என "றோ"வால் அறிவுறுத்தப்பட்டது. புலிகள், ஜனநாயக வழிக்கு செல்லும்போது மக்கள் ஆதரவு தமக்குக் கிடைக்காது என அஞ்சியே மக்களை ஆயுத பலத்தில் தம் பக்கம் வைத்திருக்க முயல்வதாக இந்தியா நம்பியது.

எனவே 1989 பெப்ரவரி தேர்தலில் இந்தியாவின் எண்ணப்படி யாழ் மாவட்டத்தில் போட்டியிட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர்கள் மூவரும் ஏனைய இடங்களில் ஈரோஸ் உறுப்பினர்களும் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. வன்னி மாவட்டத்திலும் கூட்டணி சார்பில் போட்டியிட்டவர்களில் ஈபி.ஆர்.எல்.எவ் உறுப்பினர்கள் இருவருமே வெற்றிபெற்றனர். ஏனைய இடங்களில் முஸ்லிம் காங்கிரஸ், ஐ.தே.கட்சி. ஈரோஸ் ஆகியவற்றுக்கு தலா ஒவ்வொரு இடம் கிடைத்தன.

கிழக்கு மாகாணத்தில் மூன்று சமூகங்களும் வாழ்வதால், குறிப்பாக தமிழ் முஸ்லிம் மக்கள் விகிதாசாரத்தில் அதிக வித்தியாசம் காணப்படாமையால் வடக்கில் நடைபெற்றது போல் கிழக்கில் பாரிய தேர்தல் குழறுபடிகளைச் செய்ய இந்தியாவால் முடியாது போயிற்று. இதனால் கூட்டணி சார்பில் போட்டியிட்ட நால்வர் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது. இவர்களில் இருவர் ஈபி.ஆர்.எல்.எவ். இயக்கத்திலும் இருவர் ரெலோ இயக்கத்திலும் தெரிவாகினர். ஈரோஸ் சார்பில் மூவர் தெரிவாகினர். மீதியாக உள்ள எட்டு இடங்களில் ஐ.தே.கட்சி 4 இடங்களையும், சுதந்திரக் கட்சி 2 இடங்களையும், முஸ்லிம் காங்கிரஸ் 2 இடங்களையும் பெற்றன.

படிப்பகம்

www.padippakam.com



இந்தத் தேர்தலில் த.வி.கூட்டணியினர் ஒரு ஆசனங்களைக்கூட பெறாது இந்தியாவால் ஏமாற்றப்பட்டனர். "றோ" ஆரம்பகாலத்தில் இருந்தே திட்டமிட்டு த.வி. கூட்டணியின் அரசியல் தலைமையை இல்லாமல் செய்வதில் வெற்றி கண்டது.

1977ல் நடந்த தேர்தலில் தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு கிழக்கில் த.வி.கூட்டணியினர் அமோக வெற்றி பெற்றதன்மூலம் தமிழ் பேசும் மக்களின் அரசியல் சக்தியாக விளங்கினர்

1983 கலவரங்களை அடுத்து த.வி.கூட்டணியினர் இந்தியா சென்றபோதும் இந்திய அரசு அவர்களையே தமிழ் மக்களின் அரசியல் சக்தியாக அங்கீகரித்திருந்தது.

1985 ல் நடந்த திம்பு பேச்சுவார்த்தைக்கு முன்னர், இலங்கை அரசுடன் நடைபெற்ற நேரடிப் பேச்சு வார்த்தைகளில் த.வி.கூட்டணியினரே கலந்து கொண்டனர். ஆனால் திம்புவில் நடந்த பேச்சுவார்த்தைக்கு கூட்டணியினருடன் ஆயுதக் குழுக்களையும் பங்குபற்ற வைத்ததன் மூலம் வெறும் ராணுவ சக்திகளாக கருதப்பட்ட இயக்கங்களை யும் அரசியல் சக்திகளாக அங்கீகரிக்கச் செய்தனர். திம்புவில் கூட்டணியினரை பின் தள்ளிய "றோ" பெங்களூர் மகாநாட்டின் போது ஜே.ஆருடன் பேசுவதற்கு என பிரபாகரனை மட்டும் அழைத்ததன் மூலம் ஏனைய இயக்கங்களையும் பின் தள்ளியது.

வடக்கில் நடைபெற்ற தேர்தல் முறைகளை இந்திய ஆதரவுடன் போட்டியிட்ட கட்சிகளே குறைகூறியுள்ளனர். வாக்குப் பெட்டிகள் இந்திய இராணுவத்தால் வாக்கு எண்ணப்படும் இடத்துக்கு நேரே கொண்டு செல்லப்படவில்லை என குற்றம் சாட்டி மனம் வருந்தியுள்ளனர். இந்தத் தேர்தல் பற்றியும் தேர்தலுக்கு முன்னர் வடக்கில் நிலவிய சூழ்நிலை பற்றியும் ஆங்கில நாளேடான "ஐலண்ட்" பத்திரிகையில் தேர்தலின் பின்னர் விமர்சனம் ஒன்று வெளிவந்தது.

## புலிகள் அரசு பேச்சுவார்த்தை

புலிகள் மிகவும் பலவீனமான நிலையில்-மாகாணசபை உருவானபின்னர் - இந்தியாவிடமோ அல்லது இலங்கையிடமோ சரணாகதியடையவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாயினர். இந்த நிலையில் அவர்கள் இந்தியாவிடம் சரணாகதியடைவது என்பது அவர்களுக்கு கௌரவப் பிரச்சனையாக இருந்தது. இந்தியாவுடன் போர் தொடங்கியதையடுத்து இந்திய எதிர்ப்பு வாதத்தை புலிகளும் தமிழ் மக்களுக்குப் புகட்டியிருந்ததால் உடனடியாக அவர்கள் இந்தியாவிடம் சரணடைவதை மக்கள் ஜீரணிக்கமாட்டார்கள் என அஞ்சினர். இதனால் அவர்களுக்கு இருந்த ஒரே வழி இலங்கை அரசிடம்

படிப்பகம்

சரணடைவதே. இதற்கு பாராளுமன்றத் தேர்தல் முடிவுகளும் சாதகமாக அமைந்தது.

இலங்கையின் தென்பகுதியில் மக்கள் விடுதலை முன்னணியின்(ஜே.வி.பி.) தீவிரவாத நடவடிக்கைகள் உச்சகட்டத்தை அடைந்த போது ஜனாதிபதி அவர்கள் தீவிரவாதத்தை கைவிட்டு அனைவரையும் பேச்சுவார்த்தைமூலம் பிரச்சனைக்கு தீர்வுகாண வரும்படி அழைப்பு விடுத்திருந்தார். இந்த அழைப்பை சாதகமாக்கிக் கொண்ட புலிகள் ஜனாதிபதி பிரேமதாசாவுடன் பேச விண்ணப்பித்துக் கொண்டனர். இந்தியப் படையை எப்படியாவது இலங்கையை விட்டு வெளியேற்றவேண்டும் என்ற நோக்கத்தைக் கொண்டிருந்த ஜனாதிபதி பிரேமதாசா புலிகளுடன் பேச்சு வார்த்தையை ஆரம்பித்தார். இவர்களுடைய பேச்சு வார்த்தைகள் இரகசியமாகவே நடைபெற்றன. இதனால் இவர்களிடையே நடைபெற்ற பேச்சுக்கள் மக்களுக்குத் தெரியாத சிதம்பர ரகசியமாகிவிட்டன.

ஆனால் பேச்சுவார்த்தை தொடர்பாக ஜனாதிபதி செயலகம் வெளியிட்டு வந்த அறிக்கைகளின்படி புலிகள் தமிழர் பிரச்சனை சம்பந்தமாக எதுவும் பேசியதாகத் தெரியவில்லை. முழுக்க முழுக்க புலிகள் தங்கள் பாதுகாப்பு, இந்தியப் படைகளின்(அத்துமீறல்) மனித உரிமைகள் மீறல் போன்ற விடயங்களே பேசியதாக தெரிகிறது. மேலும் மாகாணசபையைக் கலைத்தல், ஏனைய தமிழ் அமைப்புகளை அழித்தல் ஆகியவை பற்றியே பேசப்பட்டு அவை நடைமுறைப்படுத்தப்பட்டன. கொழும்பில் புலிகள் பகிரங்கமாக ஆயுதங்களுடன் அரசபடை வாகனங்களில் பவனி வந்தனர். இராணுவம் விமானப் படையினர், உதவியுடன் கொழும்பு விடுதிகளில் தங்கியிருந்த மாற்று இயக்கத்தவர்களையும், இயக்கங்களில் இருந்து விலகி வெளிநாடுகள் செல்ல கொழும்பில் தங்கியிருந்தவர்களையும், கைது செயதனர். இதையடுத்து புலிக்கு பயந்த பல இளைஞர்கள் இராணுவத்திடம் சரணடைந்தனர். இவர்கள்தான் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே பின்னர் மோதல் ஏற்பட்டபோது புலிகளுக்கு எதிராக இராணுவத்தால் பயன்படுத்தப்பட்டனர்.

அரசுக்கும் புலிகளுக்குமிடையே பேச்சுக்கள் நடைபெற்றுக்கொண்டிருந்த போது 1989ஜுன் 20 திகதி இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்தி இலங்கை ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் *"இலங்கை அரசு மாகாண சபைக்கு உரிய அதிகாரங்களை வழங்கி சிங்களக் குடியேற்றங்களையும் நிறுத்தியிருந்தால் ஆயுதக் குழுக்கள் மக்களிடமிருந்து அந்நியப்பட்டிருப்பர்"* எனத் தெரிவித்திருந்தார். ஜனாதிபதி பிரேமதாசா அக்கடிதத்திற்கு பதிலளிக்கும் வகையில் இலங்கை இந்திய ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர் எவ்வித குடியேற்றங்களும் வடக்கு கிழக்கில் நடைபெறவில்லை எனத் தெரிவித்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் புலிகள் எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை.

www.padippakam.com



ஆனால் 16-06-89 ல் புலிகளால் வெளியிடப்பட்ட பத்திரிகை அறிக்கை ஒன்றில் "சிங்களக் குடியேற்றங்களை ஊக்குவித்து தமிழ் மண்ணை ஆக்கிரமிக்கும் வேலையில் இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் தமிழீழப் பிரதேசங்களில் குறிப்பாக எல்லையோரங்களில் தாக்குதலை நடத்தி எமது மக்களை வெளியேற்றி இலங்கைக்கு உதவுகிறது. இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் எடுக்கும் இவ்வித நடவடிக்கைகளுக்கு தமிழ் மக்களின் தேசத் துரோகிகளான ஐந்தாம் படையினர் ஒத்துழைப்பு வழங்குகின்றனர். தமிழ் மக்களைச் சொந்த மண்ணிலேயே அகதிகளாக்கி அவர்களை அழித்து வருவதை அவர்கள் புரிந்து கொள்ளவேண்டும்" என மாகாண அரசைக் குற்றம் சாட்டியிருந்தனர்.

## மாகாணசபை கலைப்பு

அரசுக்கும் புலிகளுக்கும் இடையே பேச்சு வார்த்தை ஆரம்பித்த பின்னர் வடக்கு கிழக்கு மாகாண சபைக்கும் இலங்கை அரசுக்கும் இடையே நம்பிக்கையும், சுசப்புணர்வும் வளர ஆரம்பித்தது.

திடீர் என ஜனாதிபதி பிரேமதாசா அவர்கள் இலங்கையில் இருந்து இந்தியப் படை விலகிக் கொள்வதற்கான கால எல்லையாக 1989 ஜூலை 29ம் திகதியை அறிவித்திருந்தார். இந்த அறிவிப்பை அடுத்து இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்தி இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் சகல அம்சங்களும் நிறைவேற்றப்பட்ட பின்னர் மாத்திரமே இந்திய அமைதி காக்கும் படை இலங்கையில் இருந்து விலக்கிக் கொள்ளப்படும் என வலியுறுத்தியிருந்தார்.,

ஆனாலும் இலங்கைத் தூதுக் குழுக்கள் இந்தியாவுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து இந்திய நாடாளுமன்றத் தேர்தலையும் கருத்தில் கொண்டு இந்திய அரசு தனது படைகளை இலங்கையில் இருந்து திருப்பி அழைக்க ஒப்புக்கொண்டது.

அதைத் தொடர்ந்து வடக்கு கிழக்கு மாகாணசபையின் பாதுகாப்புக்கென இந்தியா ஒரு படையை உருவாக்க முயன்றது. இலங்கை அரசு மூவாயிரம் பேருக்கு பயிற்சியளிக்க அங்கீகாரம் வழங்கிய போதிலும் இந்திய இராணுவமோ அதற்கு கூடுதலான இளைஞர்களுக்கு பயிற்சி அளித்தது.

இதற்காக ஈ.பி.ஆர்.எல்.எவ். ,ரெலோ, ஈ.என்.டி.எல்.எவ். ஆகிய இயக்கங்கள் ஒவ்வொன்றும் தங்களுடைய பலத்தைக் காட்டும் நோக்குடன் போட்டி போட்டு இளைஞர்களை பலாத்காரமாக இராணுவப் பயிற்சிக்கு அழைத்துச் சென்றனர். இப்படி கட்டாயமாக பயிற்சி அளிக்கப்பட்டு உருவாக்கப்பட்ட இராணுவத்தை ஒன்றிணைத்து தமிழ் தேசிய இராணுவம் என அழைத்தனர். இந்தியப் படை வெளியேறியதும் மாகாண சபையின் பாதுகாப்பை இந்தத்

படிப்பகம்

www.padippakam.com



தேசிய இராணுவமே பொறுப்பேற்கும் என எதிர்பார்க்கப்பட்டது. இந்த தேசிய இராணுவத்திற்கு இந்தியாவினால் தாராளமாக ஆயுதம் வழங்கப்பட்டது.

இந்தியாவின் இந்த ஆயுத வழங்களில் இரண்டு நோக்கங்கள் இருந்தன. இந்த மாகாண சபைக்கு பாதுகாப்பளிப்பது அல்லது இந்த ஆயுதங்கள் புலிகளின் கைகளில் போவதன் மூலம் இலங்கை அரசுக்கு பிரச்சனைகளை உருவாக்குவது என்பதே. இதன் மூலம் இந்தியா தான் நினைத்ததை சாதித்துக் கொண்டது என்பது உண்மையே.

தமிழ் தேசிய ராணுவம் இலங்கை அரசுக்கு அச்சத்தைக் கொடுத்தது. எனவே இந்தியப் படையினருக்கு அஞ்சி இலங்கை முகாம்களில் தஞ்சம் அடைந்திருந்த விடுதலைப் புலிகளை இந்த தேசிய ராணுவத்தின் மேல் இலங்கை அரசு ஏவிவிட்டது.

தமிழ் தேசிய ராணுவத்தை தாக்க சந்தர்ப்பம் எதிர்பார்த்துக் கொண்டிருந்த புலிகள் உடனே அம்பாறை மாவட்டத்தில் உள்ள தம்பிலுவில், திருக்கோவில் ஆகிய இடங்களில் இருந்த தமிழ் தேசிய ராணுவத்தின் முகாம்களைத் தாக்கினர். இதற்கு இலங்கை ராணுவமும் உதவி புரிந்தது. தேசிய ராணுவத்தில் பலாத்காரமாக சேர்க்கப்பட்ட பல இளைஞர்கள் இந்த தாக்குதலின் போது புலிகளிடம் சரணடைந்தனர். புலிகளை நம்பி சரணடைந்த இளைஞர்களை அவர்கள் இலங்கை ராணுவத்தை விடமோசமான முறையில் சித்திரவதை செய்து கொலை செய்தனர். தேசிய ராணுவத்திற்கு இளைஞர்கள் பலாத்காரமாக சேர்க்கப்படுகிறார்கள் என இலங்கை அரசிடம் பல முறை இந்த புலிகள்தான் முறையிட்டு வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இப்படியாக சொந்த சகோதரர்களை மனிதாபிமானமற்ற முறையில் கொலை செய்யும் இவர்கள்தான் அந்நியர்களான இந்தியப் படையினரின் மனித உரிமைகள் மீறல்பற்றி இலங்கையிடமும் இலங்கை அரசின் மனித உரிமைகள் மீறல்பற்றி இந்தியாவிடமும் மாறி, மாறி முறையிட்டனர் என்பதும் குறிப்பிடவேண்டும். பொலநறுவையில் புலிகளில் தாக்குதலுக்கு தப்பி இலங்கை ராணுவத்திடம் சரணடைந்த 100 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் இலங்கை ராணுவத்தால் பாதுகாக்கப்பட்டு பின்னர் இந்தியப் படையிடம் ஒப்படைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர் என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

இந்த தாக்குதல் பற்றி பாராளுமன்றத்தில் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரத்னா விளக்கம் அளிக்கையில் *மாகாண சபையின் பாதுகாப்புக்கென 3000 பேருக்கு பயிற்சி அளிக்கும்படி இந்திய ராணுவத்திற்கு அங்கீகாரம் அளித்தோம். அவர்கள் எமக்கு தெரியாமல் மேலும் 4000 பேருக்கு பயிற்சி அளித்தனர். அவர்களை இன விகிதாசாரப்படி 74 வீதம் சிங்களவர்கள். 18 வீதம் தமிழர்கள், 7 வீதம் முஸ்லிம்கள் என்ற*

படிப்பகம்

www.padippakam.com


அடிப்படையில் சேர்க்க முடிவு செய்தோம். தேசிய ராணுவத்துக்கு பயிற்சி அளித்தது பற்றி முறைப்பாடு செய்த போது அதை அவர்கள் மறுத்தனர். பின்பு புலிகள் அவர்களின் முகாம்களைத் தாக்கி நிரூபித்தனர் என்று புலிகளின் செயலுக்கு நியாயம் கற்பித்தார். புலிகள் தங்களை முதன்மைப் படுத்த தமிழர்களையும் அழிக்கத் தயங்கமாட்டார்கள் என்பதை இதன்மூலம் நிரூபித்தனர்.

தமிழ் தேசிய ராணுவத்தை இயக்கங்களின் ராணுவமாக இன்றி வடக்கு கிழக்கு மாகாணசபையின் பாதுகாப்புக்கென அமைந்த தமிழ் ராணுவமாக இலங்கை அரசின் அனுசரனையுடன் மாற்றும் முயற்சியிலேயே வடக்கு கிழக்கு மாகாணசபை முதல்வர் வரதராஜப்பெருமாள் திட்டமிட்டிருந்தார் என்பது பலருக்கு தெரியாது இருந்தது. புலிகளின் தாக்குதலுக்குப் பின்பும் மாகாண சபை இலங்கை அரசுடன் சுமுகமாகவே இருக்க முயன்றது.

முதல்வரின் இந்த திட்டம் இந்தியாவுக்கு ஏற்றதாக இருக்கவில்லை. எனவே மாகாணசபைக்கும் இலங்கை அரசுக்கும் இடையே நிரந்தர பகையை ஏற்படுத்த அப்போது "றோ"வின் பிரதிநிதியாக கிழக்கு மாகாணத்தில் தங்கி இருந்த டேவிட் என்பவர் திட்டமிட்டு மாகாண முதல்வருக்கு தெரியாமலே தேசிய ராணுவத்தின் பிரிகேடியராக இருந்த காலித்தின் உதவியுடன் அம்பாறை மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களைத் தாக்கச் செய்தார். இந்தப் பொலிசார் மாகாணசபையின் பாதுகாப்புக்கும், சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தவும் உதவியவர்கள். இந்த தாக்குதலின் போது தேசிய ராணுவத்திடம் சரணடைந்த பொலிசாரும் தேசிய ராணுவத்தால் ஈவிரக்கமின்றி சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்திய ராணுவமும் மெல்ல மெல்ல கிழக்கில் இருந்து முதலில் வாபஸ் பெறப்பட்டது. இந்திய ராணுவம் வெளியேற வெளியேற அந்த இடங்களில் இலங்கைப் படைகளும், புலிகளும் இணைந்து சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் பொறுப்பை எடுத்துக் கொண்டனர். இந்தியப் படை முற்றாக வெளியேறியதும் வடக்கு கிழக்கு மாகாணம் முழுவதும் புலிகளின் கட்டுப்பாட்டில் விடப்பட்டன.

இந்தியப் படையின் இறுதி அணி இலங்கையை விட்டு வெளியேறும் போது மாகாண சபை உறுப்பினர்கள், அவர்களுடைய குடும்பங்கள், அனைவரும் அகதிகளாக இந்தியா சென்றனர். சுமார் ஆறு மாத காலம் வடக்கு கிழக்கு மாகாணத்தில் இலங்கை அரசின் எவ்வித தலையீடும் இன்றி புலிகள் தமது ஆதிக்கத்தை செலுத்தினர்.

இந்தக் காலத்தில் இலங்கை அரசு புலிகளின் கோரிக்கைகளை அதாவது தேவைகளை பூர்த்தி செய்து வந்தது. ஆனால் புலிகள் அரசிடம் கோரியது தமிழர்களின் உரிமைகளல்ல. தமிழர்கள் மேல் ஆதிக்கம் செலுத்தும்

படிப்பகம்

www.padippakam.com


உரிமைகளையே கோரினர். அதனடிப்படையில் அரசு தமது ராணுவ முகாம்கள் பலவற்றை வடக்கில் மூடியதுடன் பொலிஸ் நிலையங்களையும் புலிகள் இஷ்டப்படி மாற்றி அமைத்தனர். இதை தமது பலத்தின் அடிப்படையில் தமக்கு அரசு செய்யும் விட்டுக் கொடுப்பாக புலிகள் பெருமைப்பட்டனர்.

இந்த இடைப்பட்ட காலத்தில் புலிகள் தம்மை ராணுவ ரீதியாக பலப்படுத்திக் கொண்டனர். அதேவேளை இலங்கை அரசோ அரசியல் ரீதியாக தம்மைப்பலப்படுத்தும் வேலைகளில் ஈடுபட்டு தமிழீழப் போராட்டத்திற்கு இருந்த உலக ஆதரவை புலிகளைக் கொண்டே இல்லாமல் செய்வதில் வெற்றி கண்டது.

இந்தியா தென்கிழக்கு ஆசியாவிலேயே ஒரு வலிமை மிக்க நாடு என்பதை மறந்து புலிகள் தமது அரசியல் சூனியத்தை வெளிப்படுத்தும் விதத்தில் இந்தியாவுக்கு எதிரான பிரச்சாரங்களை இலங்கைக்குச் சார்பாக இலங்கை அரசை திருப்திப்படுத்தும் விதத்தில் செய்தனர்.

ஜெனிவாவில் நடைபெற்ற மனித உரிமைகள் மீறல் சம்பந்தமான மகாநாடு ஒன்றில் இலங்கை அரசின் உதவியுடன் கலந்து கொண்ட புலிகளின் பிரதிநிதி திலகர் இந்தியப் படைகள் செய்த மனித உரிமைகள் மீறல் சம்பவங்களைப் பற்றிய அறிக்கையை மட்டும் சமர்ப்பித்து இலங்கை அரசுக்கு ஆதரவாக செயல்பட்டனர்.

வெளிநாடுகளில் அந்த நாட்டின் சட்டம் ஒழுங்கை மதிக்காமல் சமூகவிரோதச் செயல்களில் ஈடுபட்டு புலிகள் அந்த நாடுகளில் அரசுகளால் எச்சரிக்கப்பட்டனர். சில நாடுகளில் பொலிசாரிடம் கைதாகி சிறையில் அடைக்கப்பட்டதுடன் நாடு கடத்தப்பட்ட சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன. ஜேர்மனி போன்ற நாடுகளில் புலிகள் பகிரங்கமாக இயங்கமுடியாத நிலையில் உள்ளனர்.

இவற்றின் மூலம் இவர்கள் போராளிகள் என்ற நிலையில் இருந்து தம்மை சமூகவிரோதிகள் என்ற தரத்திற்கு இறங்கி தம்மை இனம் காட்டிக்கொண்டனர்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஜனாதிபதியாக இருந்த போது தமிழ் போராளிகளை அழிக்க எந்தச் சாத்தானோடும் கூட்டுச் சேருவேன் என்று கூறியிருந்தார். பிரேமதாசா புலிகள் என்ற சாத்தானோடு கூட்டுச் சேர்ந்து ஏனைய தமிழ் இயக்கங்களை பலவீனப்படுத்தியுள்ளார்.

நினைத்த போது போர், பலவீனமான நிலையில் சரணாகதி என்ற புலிகளின் தத்துவத்தின் அடிப்படையில் இவர்கள் மீண்டும் ஒரு தேவையற்ற யுத்தத்தில் இலங்கை அரசுடன் ஈடுபட்டுள்ளனர். அகப், புறச் சூழ்நிலை

படிப்பகம்

www.padippakam.com


சாதகமற்ற நிலையில் இந்த யுத்தம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. லண்டன் **"நஷனல் டெய்லி"** (National Daily) என்ற பத்திரிகைக்கு புலிகளின் தளபதி கிட்டு அளித்த பேட்டியில் யுத்தம் தொடங்கிய நேரம் பொருத்தமானது அல்ல எனத் தெரிவித்துள்ளார். புலிகளின் மற்றொரு தலைவரான திலகர், **"தற்போதைய யுத்தத்திற்கும் புலிகளின் அரசியல் பிரிவுக்கு சம்மதம் இல்லை** என **"லங்கா தீப"** என்ற சிங்களப் பத்திரிகையில் தெரிவித்துள்ளார்.

இப்படிப் புலிகளுக்கே நியாயம் கற்பிக்க முடியாத இந்தப் போர் தேவைதானா? இந்த போரினால் தமிழர்களின் உயிர், உடமைகள் தேவையற்ற நிலையில் அழியத்தான் வேண்டுமா?

21ம் நூற்றாண்டை நோக்கி உலகம் செல்ல தமிழீழம் 18ம் நூற்றாண்டை நோக்கி செல்கிறது. இது தேவைதானா?

"மூடனின் கையில் இருக்கும் ஆயுதம் அணுக்குண்டைவிட ஆபத்தானது"

படிப்பகம்

www.padippakam.com


# தமிழினத்தின் தலைவிதியை மாற்றிய தனிமனித விருப்பு வெறுப்புக்கள்

தமிழ்த் தேசிய இனப் போராட்டம் இந்த நிலைக்கு பின் தள்ளப்பட தனிமனிதர்களின் விருப்பு வெறுப்புக்களும் காரணமாக இருந்தமை பலருக்கு தெரியாத உண்மை.

இந்த தனிமனிதர்களில் முக்கிய பங்கை வகிப்பவர்கள் இலங்கைப் பிரச்சனையைக் கையாண்ட "றோ" அதிகாரி சந்திரசேகரம், தமிழ்நாடு முன்னாள் முதல்வர் எம். ஜி. ஆர்., புலிகளின் தனிப்பெரும் தலைவர் பிரபாகரன் ஆகியோராவர்.

முன்னாள் அமைச்சர் பண்டுறுட்டி இராமச்சந்திரன், முன்னாள் டி.ஜி.பி. மோகனதாஸ் ஆகியோர் எம். ஜி. ஆருக்கு உதவியாக இருந்து செயல்பட்டனர்.

தமிழ் நாடு முன்னாள் முதல்வர் எம். ஜி. ஆருக்கும் புளொட் செயலதிபர் உமாவுக்கும் நெருங்கிய தொடர்புகள் இருந்தபோது ஸ்ரீ சபாரத்தினத்தை கொலை செய்யும்படி எம். ஜி. ஆர். உமாவைக் கேட்டு அதற்கு அவர் மறுப்பு தெரிவித்தபின்னரே பிரபாகரனுக்கும் எம்.ஜி.ஆருக்கும் நெருங்கிய தொடர்புகள் ஏற்படலாயின.

புலிகளிடம் ஏராளமான பணத்தைப் பெற்றுக்கொண்ட றோ அதிகாரியான சந்திரசேகரம் புலிகளுக்கு சார்பாகவே பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தார். இவருடைய வாழ்க்கை வசதிகளும் வளர்ந்தன. தமிழ் போராளிக் குழுக்களுக்கு ஆயுதம் வழங்கியதாக இந்திய அரசுக்கு கணக்கை காட்டி புலிகளுக்கு அந்த ஆயுதங்களை வழங்கி அவர்களை வளர்த்தார். போராளிக் குழுக்களிடையே உடைவுகளை ஏற்படுத்த அக் குழுக்களிடையே சிலருக்கு சில உதவிகளை வழங்கி அவர்களை தனியான அமைப்புகளை ஏற்படுத்த ஊக்குவித்து விட்டு பின்னர் அவர்களுக்கு எவ்வித உதவியும் செய்யாது அவர்களை அழிக்கும் கைங்கரியங்களையும் செய்வித்தார். இவருடை நடவடிக்கைகளால் இவருடைய நாட்டுக்கும் எவ்வித நன்மையும் ஏற்படவில்லை. இலங்கைத் தமிழர்களும் எவ்வித நன்மையும் அடையவில்லை. இவர் அமெரிக்க உளவு தாபனமான சி.ஐ.ஏ. யின் ஏஜன்டாகவும் செயல்பட்டதாக கூறப்படுகிறது.

"றோ" வின் தமிழ்நாடு மானிலப் பொறுப்பதிகாரியாக செயல்பட்டு பின்னர் சி.ஐ.ஏ. உளவாளி என குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்ட

படிப்பகம்

www.padippakam.com



உன்னிக்கிருஷ்னன் (டி.ஐ.ஜி.) சிறையில் இருந்து பின்னர் விடுவிக்கப்பட்டார். ஆனால் இவர் குற்றவாளியா? அல்லது சுற்றவாளியா? என்பது கூட வெளியே எவருக்கும் தெரியவில்லை. இவர் சிறையில் இருந்த காலத்தில் இவருடன் சிறையில் இருந்த சிலருக்கு இவர் பல இரகசியங்களைத் தெரிவித்துள்ளார். தன்மேல் விசாரணை நடக்கும்போது மேல்மட்ட அதிகாரிகள் பலருடைய தலைகள் உருளும் என அவர் அடிக்கடி சிறையில் கூறிவந்துள்ளார். ஆனால் இவர் பற்றிய செய்திகள் இப்போது இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளன.

ஸ்ரீ சபாரத்தினத்தை கொலை செய்ய எம்.ஜி.ஆர். உமாவிடம் கேட்டு அவர் மறுத்த சில நாட்களின் பின்னர் எம்.ஜி.ஆரும் பிரபாகரனும் சந்தித்தனர்.

எம்.ஜி.ஆரை பிரபாகரன் சந்தித்தபோது பிரபாகரன் எம்.ஜி.ஆர் காலில் விழுந்து ஆசீர்வாதம் பெற்றதுடன் உங்கள் படங்களைப் பார்த்தபின்னரே எனக்குப் பேராட்டத்தில் ஆர்வம் ஏற்பட்டது எனக்கூறியதாகவும் இந்தப் புகழ்ச்சியில் மயங்கியே பிரபாகரனை எம்.ஜி.ஆர். ஆதரித்தார் எனவும் தமிழ்நாடு அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். பிரபாகரன் எம்.ஜி.ஆரை சந்தித்தபோது இந்த அதிகாரியும் உடன் இருந்தார். பிரபாகரனின் புகழ்ச்சியில் எம்.ஜி. ஆர் . மயங்கினார் என்பது உண்மையல்ல.

பிரபாகரனுக்கும் எம்.ஜி. ஆருக்கும் இடையே பிணைப்பு ஏற்பட ஒரு காரணம் ரெலோ இயக்கத் தலைவர் ஸ்ரீசாரத்தினம் கொலையாகும். இதைத் தொடர்ந்து எம்.ஜி. ஆரின் பல தேவைகளைப் பூர்த்தி செய்ய புலிகள் பல வழிகளில் உதவினர்.

எம்.ஜி. ஆரைப்பற்றி பலரும் பலவிதமாக விமர்சனம் செய்ததுண்டு. அவரை சிலர் ஒரு நடிகனாகப் பார்த்தனர். சிலர் அரசியல் வாதியாகப் பார்த்தனர். ஆனால் அவரை ஒரு வியாபாரியாக பார்க்க பலரும் தவறிவிட்டனர். இந்தியாவில் பல அரசியல்வாதிகள் கறுப்பு வியாபாரிகள் என்பது பலரும் அறிந்த ரகசியம். எம். ஜி. ஆரும் ஒரு கறுப்பு வியாபாரி அல்லது கறுப்பு வியாபாரிக்கு துணைநின்றவர் என்றால் அது மிகையாகாது.

தமிழ் நாட்டில் இராமசாமி உடையார் என்றால் அவரைத் தெரியாதவர்கள் இருக்கமுடியாது. எம். ஜி. ஆரின் வலது கையாக விளங்கிய இவர் சாராயத் தொழில் உட்பட பல தொழில்களுக்கு அதிபர். இவர் இந்த தொழில்களை விட அதிக இலாபம் ஈட்டும் தொழிலாக சந்தணக் கட்டைகளை தமிழ் நாட்டில் இருந்து சிங்கப்பூருக்கு கடத்துவதில் ஈடுபட்டு வந்தார்.

புலிகளின் படகுகளை, கப்பல்களை, இந்திய மத்திய அரசு கடல் பிரதேசத்தில் சுதந்திரமாக எவ்வித சோதனைகளும் இன்றி நடமாட

படிப்பகம்

www.padippakam.com


விட்டிருந்ததால் உடையாரின் கடத்தல் தொழில் புலிகள் மூலம் இலகுவாக நடந்தது.

இதுவே பிரபாகரனுக்கு எம்.ஜி.ஆர். நேரடியாகவும், ( 4 கோடி இந்திய ரூபா) மறைமுகமாகவும் பல உதவிகளை வழங்க காரணமாகும்.

எம்.ஜி. ஆர். தனக்கு வைத்தியம் செய்த வெளிநாட்டு டாக்டர் ஒருவருக்கு அன்பளிப்பாக தங்க யானை ஒன்றை பரிசளித்தார். அதை வெளியே எடுத்துச் செல்ல மத்திய அரசு அனுமதி கிடைக்கவில்லை. இந்த யானையும் புலிகளால் கடத்தப்பட்டு சிங்கப்பூரில் வைத்து அந்த டாக்டருக்கு கொடுக்கப்பட்டதாவும் கூறப்படுகிறது. எம்.ஜி. ஆர். இறந்த பின்னர் இந்த தங்க யானை விவகாரமும் பத்திரிகையில் அடிபட்டது. இந்த தங்க யானை எங்கே? என்ற கேள்வி பலராலும் எழுப்பப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## பிரபாகரன்

பிரபாகரன் ஒரு பேட்டியில் - எனக்கு ஜனநாயகத்தில் நம்பிக்கை கிடையாது. தேர்தலில் நம்பிக்கை கிடையாது என்று சொல்லியுள்ளார். ஒரு கட்சிதான் இருக்கும்., அது என் கட்சிதான் இருக்கும் எனக் கூறியுள்ளார். இதைத்தான் பிரபாகரனின் பாசிசத்துக்கு உதாரணமாக தீட்சித் எடுத்துக்காட்டியுள்ளார்.

பிரபாகரன் எப்போதும் மக்கள் நலனைவிட தனது நலனையே முதன்மைப்படுத்தி செயல்பட்டார். தனது நலனுக்காக யாரையும் அழிக்க, யாருடைய நடவடிக்கைகளையும் குழப்பத் தயங்காதவர். நாட்டு நலனுக்கு தன்னை அர்ப்பணிக்கும் மனப்பான்மை எள்ளளவும் இல்லாதவர். இதற்கு பல உதாரணங்களைக் கூறமுடியும்.

• 1981ல் உமா-சுந்தரம் குழுவினர் இயக்க நடவடிக்கைகளுக்கு பணம் சேர்க்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இச் செய்தி பிரபாகரனுக்கு தெரிய வந்ததுமே அவர்களுடைய நடவடிக்கைகளை குழப்பும் நோக்கில் யாழ்பாணத்தில் புலிகள் ஒரு ராணுவ நடவடிக்கையை மேற்கொண்டனர். இதனால் ராணுவத்தினரின் கெடுபிடிகள், கண்காணிப்புகள் யாழ்ப்பாணத்தில் அதிகமாகின. உமாகுழுவினர் யாழ்ப்பாணத்திலேயே தமது நடவடிக்கையை மேற்கொள்வர் என எதிர்பார்த்தே அங்கு குழப்ப நிலையை பிரபாகரன் தோற்றுவித்தார். ஆனால் கிளிநொச்சியில் வங்கி கொள்ளை நடத்த திட்டமிட்டிருந்த உமா குழுவினருக்கு இது சாதகமாகவே அமைந்தது.

• 1983 ல் வெலிக்கடை சிறையில் உள்ள போராளிகளை சிறை மீட்கும் பணியில் சிலர் ஈடுபடுவதை அறிந்து கொண்ட பிரபாகரன் குழுவினர் இந்த

படிப்பகம்

www.padippakam.com



மீட்புப் பணியைக் குழப்பும் நோக்கத்துடன் - ராணுவத்தினரை உசார்நிலைப்படுத்த- யாழ் திருநெல்வேலியில் ராணுவ வண்டிக்கு நிலக்கண்ணி வெடி வைத்து தகர்த்தனர். இதில் 13 ராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

இதன் எதிரொலி தென்னிலங்கையில் இனக்கலவரமாக வெடித்தது. பல தமிழ் மக்கள் அழிக்கப்பட்டனர், தமிழர்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டன. பெண்கள் மானபங்கப் படுத்தப்பட்டனர். ஒரு தேசிய இனம் சொந்த நாட்டில் அகதிகளாக்கப்பட்டனர். வெலிக்கடை சிறையில் இருந்த தங்கத்துரை, குட்டிமணி உட்பட 53 போராளிகள் படுகொலை செய்யப்பட்டனர்.

தங்கத்துரை, குட்டிமணி ஆகியோர் சிறைமீட்கப்படக்கூடாது என்ற ஒரே நோக்கத்துக்காகவே திருநெல்வேலி ராணுவத் தாக்குதல் பிரபாகரனால் மேற்கொள்ளப்பட்டது.

ஆனால் இத்தாக்குதலுக்கு புலிகள் பலகாரணங்களை சந்தர்ப்பத்துக்கேற்ப கூறிவந்தனர்.

• இதே போன்று 87 இங்கை இந்திய ஒப்பந்தத்தை முதலில் ஆதரித்து பின்னர் தன்னல அகம்பாவத்தால் இந்தியாவுடன் மோதி தமிழ் மக்களுக்கு பாரிய அழிவுகள் ஏற்பட காரணமாயினர்.

• 1988 ஜனவரியில் பிரதமர் பிரேமதாசாவிடம் வடக்கை தாம் நிர்வகிக்கும் உரிமையைப் பெற கிழக்கை இலங்கை அரசின் நிர்வாகத்தில் விட ஒப்புக்கொண்டனர்.

கிழக்கியும் வடக்கையும் இணைக்க வேண்டாம். கிழக்குப் பகுதி சிங்கள ராணுவத்தின் கண்டோலிலேயே இருக்கட்டும் யாழ்ப்பாணத்தில் பிரபாகரனின் ஆட்சி இருக்கட்டும் என இலங்கை அரசுடன் பிரபாகரன் தரப்பு பேச்சு நடத்துகிறது என்ற செய்தி இந்தியப் பத்திரிகைகளில் புலிகளின் ஆதரவுப் பத்திரிகைகளிலும் வெளிவந்திருந்தது. இது பலருக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது.

எப்போதும் தமது சுயநல நோக்கத்துக்காக தேவையற்ற முறையில் தமிழ் மக்களை பலிகொடுத்ததே புலிகளின் செயற்பாடாக இதுவரை அமைந்துள்ளது.

இன்று தமிழ் மக்கள் நிலை புலிவாலைப் பிடித்தவன் கதையாகிவிட்டது.

தமிழ் மக்கள் எதிர்காலம்...... ?

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்